டிரஸ்ட் ஆரம்பித்திட...
புதிதாக டிரஸ்ட், பவுண்டேஷன், கட்சி, ஆசிரமம், சங்கம், மன்றம், கழகம் பதிவு செய்திட தொடர்பு கொள்ளவும்.
பகவான் பவுண்டேஷன்
96004 02096

நல்லவே எண்ணல் வேண்டும்.., எண்ணிய முடிதல் வேண்டும்..,

# சக்கர வியூகம்

தினசரி "தேமதுரத் தமிழோசை உலகமெலாம்" புலனாய்வு நாளிதழ்
www.SAKKRAVIYUGAM.com

TAMIL PRESS CLUB
தமிழ் பிரஸ் கிளப்
Reg.No: 12/2013
தமிழ்நாடு, பாண்டிச்சேரியில் சிறப்பாக செயல்பட்டு வரும் பொது நல அமைப்பிற்கு 2026 ஆம் ஆண்டு உறுப்பினர் சேர்க்கை அனைத்து மாவட்டங்களிலும் ஆரம்பம்...
ஆர்வமுள்ளவர்கள் அமைப்பாளராக இணைந்திட
88705 00000
99446 16559

Website: www.sakkraviyugam.com PRGI:TNTAM/25/A1018 Email: sakkraviyugam@gmail.com

VOLUME : 01 ISSUE: 164 8.12.2025 MONDAY KARTHIGAI : 21 PRICE : RS.5/-
மலர் : 01 இதழ் : 164 8.12.2025 திங்கள்கிழமை கார்த்திகை : 21 விலை : ரூ.5/–

3 இந்தியாவை அச்சுறுத்தினால் கடும் பதிலடி; கடற்படை தளபதி எச்சரிக்கை

4 வக்ஃப் வழிபாடு உரிமையை காப்போம் மீண்டும் பாபர் மசூதியை நிறுவுவோம் எஸ்டிபிஐ ஆர்ப்பாட்டம்

2 அரசுப் பள்ளி மாணவர்களுக்கு தரம் குறைந்த இலவச சைக்கிள்; அண்ணாமலை கண்டனம்

## 'எங்கள் அரசு ஆன்மிகத்துக்கு எதிரியா?' திருப்பரங்குன்றம் விவகாரம் குறித்து முதல்வர் பேச்சு

மதுரை: டிச.8–

தமிழக முதல்வர் ஸ்டாலின் மதுரை மாவட்டத்தில் நடைபெற்ற அரசு விழாவில், முடிவுற்ற பணிகளை திறந்து வைத்து, புதிய திட்டப் பணிகளுக்கு அடிக்கல் நாட்டி, பயனாளிகளுக்கு நலத் திட்ட உதவிகளை வழங்கி ஆற்றிய உரையில், ' ஒவ்வொரு நாளும் பல லட்சம் மக்கள் பயனடைகின்றது போல, நாம் திட்டங்களை செயல்படுத்திக் கொண்டிருக்கின்ற காரணத்தினால்தான், எதிர்க்கட்சிகள் என்ன செய்வதென்றே தெரியாமல் முழிக்கிறார்கள். வயிற்றெறிச்சலிலும், ஆற்றாமையிலும், ஆரோக்கியமற்ற அரசியல் சூழ்ச்சிகளை செய்து பார்க்கிறார்கள். நாம் வளர்ச்சி அரசியலை பேசினால், அவர்கள் 'வேறு' அரசியலை பேசுகிறார்கள். நான் உறுதியாக சொல்கிறேன்.. அவர்கள் எத்தனை சூழ்ச்சி செய்தாலும், அத்தனையும் நாங்கள் முறியடிப்போம். அதை சிதைப்போம்! இந்த முத்துவேல் கருணாநிதி ஸ்டாலினிடம் அந்த "பாச்சா" எல்லாம் பலிக்காது! எதுவும் எடுபடாது!

நேற்று முன்தினம் நான் ஒரு ட்விட் செய்திருந்தேன். பார்த்திருப்பீர்கள் ௫ படித்திருப்பீர்கள் ௫ மதுரைக்கு தேவை வளர்ச்சி அரசியல் ௫ அதை நிரூபிக்கின்ற வகையில் இந்த நிகழ்ச்சிக்கு முன்பு, 36 ஆயிரத்து 660 கோடி ரூபாய் முதலீடுகள் மூலம் 56 ஆயிரத்து 766 நபர்களுக்கு வேலைவாய்ப்புகளை உறுதி செய்து கொண்டுதான் இந்த நிகழ்ச்சிக்கு வந்திருக்கிறேன். இதுதான் எங்கள் அரசியல். மதுரையையும், அதை சுற்றி இருக்கின்ற பகுதியையும், நல்ல தரமான உயர்தர வேலைவாய்ப்புள்ள இடங்களாக உருவாக்க வேண்டும் என்று இந்த அரசு ஓயாமல் பாடுபடும்.

சிலவற்றை கம்பேர் செய்து சொல்கிறேன்., நீங்களே சிறிது யோசித்து பாருங்கள்! நாம் ஆட்சிக்கு வந்ததும் இந்த மதுரையில், ஒரு அறிவுத் திருக்கோயிலாக, கலைஞர் நூற்றாண்டு நூலகம் கட்டப்படும் என்று அறிவித்தோம். அதை நாம் சொன்ன காலத்துக்கு முன்பே, பெரிதாக கட்டி முடித்து, இப்போது பல லட்சம் நபர்கள் பயனடைந்து கொண்டு வருவதை நீங்களே பார்த்துக் கொண்டிருக்கிறீர்கள். ஆனால், பத்து வருடத்திற்கு முன்பு, ஒன்றிய பா.ஜக. அரசு, மதுரைக்கு அறிவித்த எய்மஸ் மருத்துவமனை என்ன ஆனது? இன்னும் வரவில்லை!

மதுரை மண்ணில் நம்முடைய வீர விளையாட்டான ஜல்லிக்கட்டுக்கு, உலக தரத்தில், 62 கோடி ரூபாயில் கலைஞர் நூற்றாண்டு ஏறுதழுவுதல் அரங்கத்திற்கு அறிவிப்பை அறிவித்துவிட்டு, அறிவிப்போடு நிறுத்திக் கொள்ளாமல், அதை அமைத்திருக்கிறோம். இதே பாஜக அரசு நம்முடைய மதுரையில் நடந்த கீழடி அகழ்வாராய்ச்சியை நிறுத்தப் பார்த்தார்கள்.

நாம் ஆட்சிக்கு வந்ததும், பல கட்டங்களாக கீழடி ஆராய்ச்சியை முன்னெடுத்து வருவது மட்டுமல்லாமல், இதுவரை கிடைத்த தொல் பொருட்களை கொண்டு பிரம்மாண்டமான கீழடி அருங்காட்சியகம் அமைத்திருக்கிறோம்!

உலகம் முழுவதும் இருந்து கீழடி அருங்காட்சியகத்தை பார்ப்பதற்கு தமிழர்கள் வருகிறார்கள். ஆனால், இந்த ஒன்றிய பா.ஜ.க. அரசு கீழடி ஆய்வறிக்கை கூட வெளியே வந்துவிடக் கூடாது என்று தமிழ் மீது வெறுப்புடன் நடந்து கொள்கிறார்கள்.

மதுரையில் உலகத் தரத்தில் ஹாக்கி மைதானத்தைத் திறந்து வைத்திருக்கிறோம்! 24 நாடுகள் கலந்து கொள்கின்ற ஜுனியர் ஹாக்கி உலக கோப்பை நம்முடைய மதுரையில் நடைபெற்றுக் கொண்டிருக்கிறது. ஆனால், ஒன்றிய பா.ஜ.க. அரசு என்ன செய்கின்றது? குஜராத் போன்று, அவர்கள் கட்சி ஆளுகின்ற மாநிலங்களுக்கு விளையாட்டு நிதியை கொட்டிக் கொடுக்கிறார்கள். ஆனால், தமிழ்நாடு என்றால் ஒன்றும் கிடையாது!

விளையாட்டில் மட்டுமல்ல, மதுரையை முக்கிய தொழில் மையமாக உயர்த்துவதற்கு முதலீட்டாளர்கள் மாநாடு நடத்தி வேலைவாய்ப்பை நாம் கொண்டு வருகிறோம். ஆனால், ஒன்றிய பா.ஜ.க. அரசை சேர்ந்தவர்கள் என்ன சொல்கிறார்கள்? நம்முடைய இளைஞர்களை பகோடா விற்க செல்லுங்கள் என்று சொல்கிறார்கள். இதுதான் உங்கள் தரம். நம்முடைய இளைஞர்களுக்கு மதுரையில் பெரிய வேலைவாய்ப்புகள் கிடைக்க வேண்டும். நாங்கள் அதற்காக தான் மாட்டுத்தாவணியில், டைடல் பூங்கா அமைக்கிறோம். ஆனால், ஒன்றிய அரசு என்ன செய்கிறார்கள்?

மதுரைக்கு மெட்ரோ ரயில் வேண்டும் என்று நாம் கேட்டால், அதை வேண்டாம் என்று சொல்கிறார்கள். சப்பையான காரணங்களை எல்லாம் சொல்லி, நிராகரிக்கிறார்கள். அதுமட்டுமல்ல, பா.ஜக. தலைவர்கள் "மதுரைக்கு மெட்ரோ தேவையில்லை" என்று திமிராக வேறு பேசுகிறார்கள். சரி இவர்கள் சொல்கின்ற லாஜிக்படி



பார்த்தால், பா.ஜ.க. ஆளுகின்ற வட மாநிலங்களில் இருக்கின்ற பாட்னா, ஆக்ரா, இந்தூர் ஆகியவற்றில் எல்லாம் மெட்ரோ ரயிலுக்கு எப்படி ஒப்புதல் கிடைத்தது? ஏன், எங்கள் மதுரையில் மெட்ரோ ரயில் ஓடக் கூடாதா? மதுரைக்காரர்கள் என்றால், உங்களுக்கு இளக்காரமாக இருக்கிறதா?

கடந்த நான்கரை ஆண்டு காலங்களில், மதுரை மாவட்ட மக்களுக்கு மட்டும் 6 ஆயிரம் கோடி ரூபாய் மதிப்பிலான நலத்திட்ட உதவிகளை வழங்கியிருக்கிறோம்.

இதுவரைக்கும் 4 ஆயிரத்து 300 கோடி ரூபாய் மதிப்பிலான, பத்தாயிரம் வளர்ச்சிப் பணிகள் செய்து தந்திருக்கிறோம். இப்போது, ஐந்தாயிரம் கோடி ரூபாய் மதிப்பிலான 358 வளர்ச்சிப் பணிகள் நடைபெற்றுக் கொண்டிருக்கிறது!

மதுரைக்கான ஆறு புதிய அறிவிப்புகளை இங்கே அறிவிக்க நான் விரும்புகிறேன். முதலாவது அறிவிப்பு: மதுரை மாநகரில், போக்குவரத்து நெரிசலைக் குறைக்க, பல காலமாக எதிர்பார்க்கப்பட்ட வைகை ஆற்றின் வடகரையில், விரகனூர் சுற்றுச்சாலை முதல் சக்குடி வரை 8.4 கிலோ மீட்டர் நீளத்துக்கு 130 கோடி ரூபாய் செலவில் புதிய சாலை அமைக்கப்படும்.

இரண்டாவது அறிவிப்பு: மதுரை மாநகரின் முக்கிய பகுதிகளான, மீனாட்சியம்மன் கோயிலைச் சுற்றி இருக்கின்ற நான்கு மாசி வீதிகள், வெளி வீதிகள், புதூர், அண்ணா நகர், சந்தைப்பேட்டை, தெற்குவாசல், எஸ்.எஸ்.காலனி, ஆரப்பாளையம், அரசரடி, பழங்காநத்தம், பைக்காரா உள்ளிட்ட பகுதிகளில், இப்போது இருக்கின்ற பழைய பாதாளசாக்கடைக் குழாய்கள் அகற்றப்பட்டு, புதிய திட்டம் செயல்படுத்தப்படும்.

மூன்றாவது அறிவிப்பு: மதுரை கிழக்கு வட்டத்தில் இருக்கின்ற உத்தங்குடி உபரி நீர்க் கால்வாயில், 7 கோடி ரூபாய் செலவில், தடுப்புச் சுவர் கட்டப்பட்டு, நிரந்தர வெள்ளத் தடுப்புப் பணிகள் மேற்கொள்ளப்படும்.

நான்காவது அறிவிப்பு: மேலூர் வட்டத்தில் இருக்கின்ற, கேசம்பட்டி கிராமம் பெரிய அருவி நீர்த்தேக்கம் மற்றும் அதைச் சார்ந்த கண்மாய்கள் 2 கோடியே 60 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் புனரமைக்கப்படும். மேலும், மேலூர் வட்டம், சூரப்பட்டி அருகே பாலாற்றின் குறுக்கே 9 கோடியே 50 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் புதிய தடுப்பணை கட்டப்படும்.

ஐந்தாவது அறிவிப்பு: மதுரை மேற்கு வட்டத்தில் இருக்கின்ற கொடிமங்கலம், மேலமாத்தூர், புதுக்குளம் மற்றும் விளாச்சேரி கிராமங்களில் இருக்கின்ற பல்வேறு ஏரிகள் மற்றும் கால்வாய்கள் 10 கோடி ரூபாய் செலவில் மேம்படுத்தப்படும்.

ஆறாவது அறிவிப்பு: வாடிப்பட்டி வட்டம், அலங்காநல்லூர் ஒன்றியத்தில், சாத்தையாறு அணை முதல் வைகாசிப்பட்டி வரை இருக்கக்கூடிய சாலை, குடுவார்பட்டி முதல் சல்வார்பட்டி வரை இருக்கக்கூடிய சாலை மற்றும் பாலமேடு முதல் வேம்பரலை வரை இருக்கக்கூடிய சாலை ஆகியவை 1 கோடியே 50 இலட்சம் ரூபாய் செலவில் வனத்துறையின் அனுமதி பெற்று அவைகள் மேம்படுத்தப்படும்.

இந்த அறிவிப்புகளை எல்லாம் நான் வெறும் அறிவிப்புகளாக அறிவித்துவிட்டுப் போகிறேன் என்று நினைக்காதீர்கள். இந்தப் பணிகள் விரைவில் தொடங்கப்படும்.

இப்படி, நம்முடைய சிந்தனை எல்லாம் தமிழ்நாட்டின் வளர்ச்சி; முன்னேற்றம்தான்! ஆனால், சில கட்சிகளுக்கு எப்போதுமே கலவர சிந்தனைதான். தேவையில்லாத பிரச்சினையை கிளப்பி, நம்முடைய வளர்ச்சிக்கு இடையூறு ஏற்படுத்தலாம் என்று நினைக்கிறார்கள்.

காலம் காலமாக கார்த்திகை தீபத்துக்கு, திருப்பரங்குன்றம் முருகன் கோயிலில் தீபம் ஏற்றுவது போல, கடந்த 3ஆம் தேதி மாலை 6 மணிக்கு, பால தீபம் ஏற்றப்பட்டது. அதன்பிறகு, அதேநேரத்தில், உச்சிப்பிள்ளையார் கோயில் தீப மண்டபத்திலும் தீபம் ஏற்றி, சாமி புறப்பாடாகி, பதினாறு கால் மண்டபத்திற்கு எதிரே இருக்கும் இடத்தில், சொக்கப்பான் ஏற்றி, சாமிக்கு ரகைஷ சாத்தப்பட்டது. இவையெல்லாம், இந்து சமய அறநிலையத் துறை சார்பில் முறையாக நடைபெற்றது. இவை எல்லாம் உள்ளூர் மக்களுக்கும், உண்மையான பக்தர்களுக்கும் நன்றாக தெரியும்! அவர்கள் நல்லபடியாக தரிசனம் செய்துவிட்டு தான் வீட்டிற்குச் சென்றார்கள். ஆனாலும், இப்போது என்ன காரணத்துக்காக பிரச்சினை நடைபெறுகிறது? இந்தப் பிரச்சினையைக் கிளப்புகின்ற கூட்டத்தின் நோக்கம் என்ன? இவையெல்லாமே மக்களுக்கு, நன்றாகவே தெரியும்.

ஆன்மீகம் என்பது, மன அமைதியை, நிம்மதியை தந்து, மக்களை ஒற்றுமையாக இருக்க வைக்கவேண்டும். நான்கு பேருக்கு நன்மை செய்யவேண்டும்! இதுதான் உண்மையான ஆன்மீகமாக இருக்க முடியும்! ஒரு சிலருடைய அரசியல் லாபங்களுக்காக பிரிவுகளையும், பிளவுகளையும் உண்டாக்கி, சமூகத்தை துண்டாடும் சதிச்செயல்கள் நிச்சயமாக ஆன்மீகம் இல்லை! அது அரசியல்! அதிலும் கேடுகெட்ட மலிவான அரசியல்!

தீபம், எங்கே ஏற்றப்பட வேண்டுமோ, எப்போது ஏற்றப்பட வேண்டுமோ, அங்கே வழக்கம்போல சரியாக, முறையாக ஏற்றப்பட்டிருக்கிறது! நான் இன்னும் பெருமையோடு பக்தப் பெருமக்களுக்கு சொல்கிறேன். தமிழ்நாட்டு வரலாற்றிலேயே இல்லாத அளவுக்கு, நாங்கள் ஆட்சிக்கு வந்து ஆயிரத்து 490 நாளில், 3 ஆயிரத்திற்கும் மேற்பட்ட திருக்கோயில்களுக்கு குடமுழுக்கு நடத்தி இருக்கிறோம்.

இப்போது அந்த எண்ணிக்கை இன்னும் கூடியிருக்கும். இப்படிப்பட்ட அரசை, ஆன்மீகத்துக்கு எதிரி என்று சொன்னால், அப்படி சொல்லக் கூடியவர்களுடைய உள்நோக்கம் என்ன என்று, உண்மையான பக்தர்களுக்கு தெளிவாக தெரியும். அறத்தைக் கொண்டாடும் அமைதியான மாநிலமாகதான் தமிழ்நாடு என்றைக்கும் இருக்கும்!

மதுரை மக்களிடம் வளர்ச்சி என்று சொன்னால், வாங்க! வாங்க! என்று வரவேற்பார்கள். அதுவே வன்முறையை தூண்ட கூப்பிட்டால், என்ன செய்வார்கள் தெரியுமா?

மதுரை ஸ்லாங்கில் சொல்ல வேண்டும் என்றால், கலவரக் கும்பலை பொடனிலேயே அடிச்சு 'வெரட்டுவாய்ங்க!' அமைதியின் பக்கம் நிற்கின்ற, மதுரை மக்களுக்கு நான் என்னுடைய நன்றியையும், வணக்கத்தையும், பாராட்டுக்களையும் தெரிவித்துக் கொள்கிறேன்!

நம்முடைய எதிரிகள், டெல்லியில் இருந்து நமக்கு எத்தனை இடைஞ்சல்கள் கொடுத்தாலும், நிதி நெருக்கடிகள் ஏற்படுத்தினாலும், ஆளுநர் மூலமாக முட்டுக்கட்டைகள் போட்டாலும், எல்லாவற்றையும் மீறி, இந்தியாவிலேயே நம்பர்1ஆக வரலாறு காணாத பொருளாதார வளர்ச்சியை தமிழ்நாடு அடைந்திருக்கிறது!

எங்களுடைய வளர்ச்சிப் பயணத்தை, உங்களால் தாங்கிக் கொள்ள முடியவில்லை. அதனால் சதித்திட்டங்கள் எல்லாம் நீங்கள் செய்கிறீர்கள்! நீங்கள் எப்படி பந்து வீசினாலும், தமிழ்நாட்டைப் பொறுத்தவரைக்கும் அது அடிப்பது சிக்சர்தான்! அந்த டீமுக்கு ஏற்றார்போல அடிமைகள் சிக்கலாம். பழைய அடிமைகள், புது அடிமைகளை வைத்து, 'பி' டீம், 'சி' டீம் உருவாகலாம். ஆனால், கடைசியில் டோர்னமென்ட்டில் சாம்பியன் நாங்கள் தான்!

வருகின்ற 15ஆம் தேதியில் இருந்து, ஏற்கனவே, கலைஞர் மகளிர் உரிமைத் திட்டத்தில் பயனடைகின்ற ஒரு கோடியே 14 இலட்சம் மகளிரோடு சேர்த்து, விடுபட்ட தகுதியான மகளிருக்கும் மாதம் ஆயிரம் ரூபாய் உரிமைத்தொகை வழங்கப் போகிறோம்.

இங்கே திரண்டிருக்கின்ற, மதுரை மக்கள் மீதான நம்பிக்கையில் சொல்கின்றேன். அனைத்து மதத்தினரும், அங்காளி, பங்காளியாக பழகுகின்ற, பாசக்கார மதுரை மண்ணிலிருந்து உறுதியாக சொல்கின்றேன். எங்கள் தமிழ்நாட்டில், என்றைக்கும் பெரியார் ஏற்றிய, சமத்துவ தீபம்தான் ஒளிரும்! உங்களால் அதை தடுக்க முடியாது! "எதிர்த்துக் கேட்க ஆள் இருக்கிறது! உள்ளே பெரியார் ஏற்றிய நெருப்பிருக்கிறது. 2026 லும் அதே ஃபயருடன், திராவிட மாடல் அரசுதான் தொடரும்' எனத் தெரிவித்தார்.

## ஆத்தூர் ஒன்றியத்தில் உள்ள பிள்ளையார் நத்தம், ஆலமரத்துப்பட்டி, கலிக்கம்பட்டி ஊராட்சி பொதுமக்களுக்கு தொகுதி மக்களுக்கு அமைச்சர் ஐ.பெரியசாமி அவர்களின் பொங்கல் பரிசு விநியோகம் : பொதுமக்கள் பாராட்டு

சின்னாளபட்டி, டிச.8-

ஆத்தூர் ஒன்றியத்தில் உள்ள பிள்ளையார் நத்தம், ஆலமரத்துப்பட்டி, கலிக்கம்பட்டி ஊராட்சி பொதுமக்களுக்கு அமைச்சர் ஐ.பெரியசாமி அவர்களின் சார்பாக பொங்கல்பரிசுவழங்கப்பட்டதற்கு கிராம மக்கள் அமைச்சர் பெரியசாமிஅவர்களுக்குமனதார பாராட்டும் நன்றியும் தெரிவித்தனர் . எங்களின் சகோதரனாய்பொங்கல் பரிசு வழங்கிய அமைச்சர் ஐ.பெரியசாமிக்கு என்றும் உறுதுணையாய் இருப்போம் என கிராமப்புற பெண்கள் உறுதிபட பேசினார்கள்.

திண்டுக்கல் மாவட்டம், ஆத்தூர் சட்டமன்ற தொகுதி திமுக உறுப்பினரும், திமுக மாநில துணை பொதுச்செயலாளரும், ஊரக வளர்ச்சித்துறை அமைச்சருமான ஐ.பெரியசாமி அவர்கள் 1989ம் ஆண்டு முதல் இன்று வரை தொகுதி மக்களோடு மக்களாக பழகிவருவதால் அவரை தொகுதி மக்கள் அவரது பெயரை உச்சரிக்காமல் ஐ.பி. என்று செல்லமாக அழைப்பதுடன் தென்பாண்டி சிங்கம் என அனைத்து இடங்களிலும் சொல்வார்கள். ஆட்சியில் இருந்தாலும் இல்லாவிட்டாலும் தொகுதி மக்களுக்கு தீபாவளி அன்பளிப்பு, பொங்கல் அன்பளிப்பு வழங்குவதை வழக்கமாக கொண்டுள்ளார். இவ்வருடம் திமுகவின்; 75வது ஆண்டுவிழா, துணை முதல்வர் உதயநிதி அவர்களின் பிறந்தநாள் விழா, பொங்கல் பண்டிகையை முன்னிட்டு அமைச்சர் ஐ.பெரியசாமி அவர்கள் தொகுதி மக்களுக்கு எவர்சில்வர் பாத்திரம் (சம்படம்) வழங்கி வருகிறார். இதற்கு தொகுதி மக்கள் மத்தியில் குறிப்பாக பெண்கள் மத்தியில்



நல்ல வரவேற்பு கிடைத்துள்ளது ஆத்தூர் ஒன்றியத்துக்கு உட்பட்ட பிள்ளையார் நத்தம் ஆலமரத்துப்பட்டி கலிக்கம்பட்டி ஊராட்சி பொதுமக்களுக்கு அமைச்சராய் பெரியசாமி அவர்களின் சார்பாக எவர்சில்வர் பாத்திரங்கள் வழங்கப்பட்டது திண்டுக்கல் கிழக்கு மாவட்ட திமுக அவைத்தலைவர் வழக்கறிஞர் காமாட்சி, .திமுக தலைமை செயற்குழு உறுப்பினர் ஆத்தூர் நடராஜன் , ஆத்தூர் கிழக்கு ஒன்றிய திமுக செயலாளர் பிள்ளையார் நத்தம் முருகேசன் ஆகியோர் 3 ஊராட்சிகளுக்கு சென்று பொதுமக்களை நேரில் சந்தித்து அமைச்சரின் பொங்கல் பரிசுகளை வழங்கினார்கள் கிராமப்புற பெண்கள் ஆர்வமுடன் போட்டி போட்டுக்கொண்டு பாத்திரங்களை வாங்கிச் செல்கின்றனர். இது குறித்து பிள்ளையார் நத்தம், ஆலமரத்துப்பட்டி, கலிக்கம்பட்டி ஊராட்சிகளை சேர்ந்த பெண்கள் கூறுகையில், தமிழக முதல்வர் ஸ்டாலின் ஐயா எங்களுக்கு மாதந்தோறும் மகளிர் உரிமைத் தொகை வழங்கிவருகிறார். ஆத்தூர் தொகுதியில் அமைச்சர் ஐ.பெரியசாமி அய்யா அவர்கள் பண்டிகை நாட்களான தீபாவளி, பொங்கல் உட்பட விஷேச நாட்களில் அன்பளிப்பு வழங்குவதை வழக்கமாகக் கொண்டுள்ளார். எங்களின் சகோதரனாய் பொங்கல் பரிசு வழங்கிய அமைச்சர் ஐ.பெரியசாமிக்கு என்றும் உறுதுணையாய் இருப்போம் என கிராமப்புற பெண்கள் உறுதிபட பேசினார்கள். நிகழ்ச்சியில் ஆத்தூர் கிழக்கு ஒன்றிய திமுக அவைத்தலைவர் சிவக்குமார், துணைச்செயலாளர்கள் ஆலமரத்துப்பட்டி ராஜேந்திரன், எம்.சி.பாண்டியன், பொருளாளர் கருப்பையா, முன்னால் மாவட்ட கவுன்சிலர் பத்மாவதி ராஜகணேஷ், ஆத்தூர் ஒன்றிய இளைஞர் அணி அமைப்பாளர் ராஜகணேஷ், ஒன்றிய மாணவரணி அமைப்பாளர் அரவிந்தன், முன்னாள் ஊராட்சி மன்ற தலைவர்கள் கலிக்கம்பட்டி புவனேஸ்வரி அருளரசன், பிள்ளையார் நத்தம் ஊராட்சி உலகநாதன், ஆலமரத்துப்பட்டி ஆறுமுகம், அரசு ஒப்பந்தகாரர்கள் விக்னேஷ்வரன், ஜீசஸ் அகஸ்டின், மெல்வின், ஒன்றிய மாணவரணி துணை அமைப்பாளர் பிள்ளையார்நத்தம் அருண், ஊராட்சி கிளைச்செயலாளர் கண்ணன், பிரதிநிதி ராமமூர்த்தி, திண்டுக்கல் மாமன்ற உறுப்பினர் மாவீரன் நெல்லை சுபாஷ், உட்பட திமுக நிர்வாகிகள் பலர் கலந்து கொண்டனர்

# தமிழகத்தில் என்றும் சமத்துவ தீபம் எரியும்: முதல்வர் ஸ்டாலின்



சென்னை, டிச.8-

தமிழகத்தில் என்றும் சமத்துவ தீபம் எரியும் என்று முதல்வர் ஸ்டாலின் கூறியுள்ளார்.

மதுரையில் வேலுநாச்சியார் மேம்பாலத்தை முதல்வர் ஸ்டாலின் திறந்து வைத்தார். பின்னர், மதுரைக்கு பல்வேறு திட்டங்களையும் அவர் அறிவித்தார்.

இதுகுறித்து முதல்வர் ஸ்டாலின் தமது எக்ஸ் வலை தள பதிவில் குறிப்பிட்டு உள்ளதாவது;

கருணாநிதி நூற்றாண்டு நூலகம், கருணாநிதி நூற்றாண்டு ஏறு தழுவுதல் அரங்கம், பிரமாண்டமான கீழடி அருங்காட்சியகம், உலகத் தரத்தில் ஹாக்கி மைதானம் இவைதான் நமது திராவிட மாடல் அரசு பேசும் மதுரைக்கான வளர்ச்சி அரசியல்.

தமிழகத்தில் என்றும் சமத்துவ தீபம் எரியும்! வளர்ச்சியின் ஒளி பெருகும்.

இவ்வாறு முதல்வர் ஸ்டாலின் அதில் குறிப்பிட்டுள்ளார்.

# போலீஸ் ஏட்டு கையை கடித்த தவெக தொண்டர்: வீடியோ வைரல்



தர்மபுரி. டிச.8-

ஆர்ப்பாட்டத்தின் போது பாதுகாப்புப் பணியில் போலீஸ் ஏட்டு கையை தவெக தொண்டர் ஒருவர் கடித்த வீடியோ சமூக வலைதளங்களில் வைரலாகியுள்ளது.

அரசியல் கட்சிகள் போராட்டம் நடத்தும்போது தொண்டர்கள் தடையை மீறும்போது போலீசார் அதனை தடுப்பார்கள். அப்போது இரு தரப்புக்கு இடையே மோதல் ஏற்படுவது வழக்கம். போலீசார் தள்ளிவிட்டால், தொண்டர்களும் அவர்களை தள்ளிவிடும் நிகழ்வுகள் ஆங்காங்கே நடப்பது வழக்கம். கூட்டத்தை கட்டுப்படுத்துவதற்காக போலீசார் தடியடி நடத்துவர். இதனை நாம் பார்த்துள்ளோம். ஆனால், முதல்முறையாக போலீஸ்காரரை தவெக தொண்டர் ஒருவர் கடித்த சம்பவம் நடந்துள்ளது.

தர்மபுரி மாவட்டம் பாலக்கோட்டில், தக்காளி மார்க்கெட் அருகே, நவ., 22ம் தேதி, டாஸ்மாக் கடை அருகே, 'பார்' வசதியுடன் 'மனமகிழ் மன்றம்' திறக்கப்பட்டது. ஒரு வாரமாக செயல்பாட்டில் இருந்து வருகிறது. இதற்கு மக்கள் மற்றும் சமூக ஆர்வலர்கள் எதிர்ப்பு தெரிவித்த நிலையில், த.வெ.க.,வினர் இதை கண்டித்து தர்மபுரி மாவட்ட செயலாளர் சிவா தலைமையில், 'மனமகிழ் மன்றம்' முன் இன்று(டிச.,07) மதியம் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டு முற்றுகையிட முயன்றனர். இதனால் கட்சினருக்கும், பாதுகாப்பு பணியில் ஈடுபட்டிருந்த போலீசாருக்கும் தள்ளுமுள்ளு ஏற்பட்டது.

அப்போது, ஜெமினி, 23, என்ற தொண்டர், அங்கு பாதுகாப்பு பணியில் ஈடுபட்டு இருந்த அருண் என்ற போலீஸ் ஏட்டுவின் கையை கடித்தார். இது போலீசார் உட்பட அங்கிருந்தவர்கள் அனைவருக்கும் அதிர்ச்சியை ஏற்படுத்தி உள்ளது. தொடர்ந்து த.வெ.க.,வினர் டாஸ்மாக் கடை முன் தர்ணாவில் ஈடுபட்டனர். இதனால், 16 பெண்கள் உட்பட, 103 பேரை, பாலக்கோடு டி.எஸ்.பி., ராஜசுந்தர் தலைமையிலான போலீசார் கைது செய்தனர். தவெக தொண்டர் கையை கடித்த சம்பவம் தொடர்பாக இதுவரை போலீசார் வழக்குப்பதிவு செய்யவில்லை.

கரூர் கூட்ட நெரிசல் சம்பவத்துக்கு பிறகு தவெகவினர் விமர்சிக்கப்பட்டு வந்தனர். தற்போது அக்கட்சி தொண்டர் ஒருவர் பாதுகாப்பு பணியில் இருந்த போலீஸ்காரர் கையை கடித்த நிகழ்வு கடுமையான, கேலி, விமர்சனத்துக்கு உள்ளாகியுள்ளது. இது குறித்த வீடியோ சமூக ஊடகங்களில் வெளியாகி வைரலாகியுள்ளது.

# தேர்தல் நெருங்கும் நேரத்தில் திட்டங்கள் அறிவிப்பதா? முதல்வருக்கு நயினார் நாகேந்திரன் கேள்வி




சென்னை. டிச.8-

தேர்தல் நெங்கும் வேளையில் மடிக்கணினி வழங்குவதாக அறிவித்த, முதல்வர் ஸ்டாலினுக்கு தமிழக பாஜ தலைவர் நயினார் நாகேந்திரன் 5 கேள்விகளை எழுப்பி உள்ளார்.

அவரது அறிக்கை: திமுகவின் ஆட்சி முடிவதற்கு இன்னும் தோராயமாக 70 நாட்களே உள்ள நிலையில், தற்போது கல்லூரி மாணவர்களுக்கு மடிக்கணினி வழங்குவேன் என முதல்வர் ஸ்டாலின் அறிவித்துள்ளது அப்பட்டமான கண் துடைப்பு நாடகமே. மக்களை ஏமாற்றி திசைதிருப்ப முயலும் முதல்வர் அவர்களிடம் சில நேரடிக் கேள்விகள்:

1. ஆட்சிக்கு வந்து, 55 மாதங்கள் தாமதமாக மடிக்கணினிகள் வழங்குவதேன்?

2. ஜெயலலிதாவின் திட்டத்தை நிறுத்த முயற்சித்த பின்பு மாணவர்களின் கோபத்திற்கு ஆளானதாலேயே மடிக்கணினிகள் வழங்க முடிவு செய்துள்ளீர்கள் என்பதை உங்களால் மறுக்க முடியுமா?

இதையும் படிங்க

கூடுவாஞ்சேரி அரசு பள்ளியில் மடிக்கணினிகள் 'ஆட்டை'

3. திமுக தேர்தல் அறிக்கை வாக்குறுதி எண் 163ல், டேப்லெட் மற்றும் 10நிபி டேட்டா கொடுப்போம் என்று வாக்குறுதி அளித்தீர்கள். மடிக்கணினி வழங்கும் திட்டத்தை நிறுத்தவே, டேப்லெட் வழங்குவோம் என்று அறிவித்தீர்கள். அப்படியிருக்க, 55 மாதங்களாக மடிக்கணினியும் வழங்காமல், டேப்லெடும் வழங்காமல் கிடப்பில் போட்டது ஏன்?

4. அதிமுக ஆட்சியில் பள்ளி மாணவர்களுக்கு, கல்லூரிக்குள் நுழையும் முன்பே மடிக்கணினிகள் வழங்கப்பட்டன. ஆனால், உங்களது ஆட்சியில் பள்ளி மாணவர்கள் ஏன் முற்றிலும் புறக்கணிக்கப்பட்டுள்ளனர்?

5. உங்களது ஆட்சியில் கடந்த பட்ஜெட்டில் 20 லட்சம் மடிக்கணினிகளுக்கு ஒதுக்கீடு செய்ததாக அறிவிப்பு வெளியானது. ஆனால், இன்றோ 10 லட்சம் மடிக்கணினிகள் மட்டுமே கொடுக்கப்படுவதாக செய்திகள் வெளியாகின்றன. மீதமுள்ள 10 லட்சம் மடிக்கணினிகள் என்னவாயின? உங்களுக்கு ஊழல் செய்வது புதிதல்ல என்பது தெரியும். ஆனால், மாணவர்களின் கல்வியிலும் ஊழல் செய்ய வேண்டுமா?

மக்களிடம் இத்தனை கேள்விகள் எழும் வேளையில், வெற்று விளம்பரத்திற்காக இத்திட்டத்தை அரைகுறையாகச் செயல்படுத்த நினைக்கும் திமுக அரசை, மக்கள் ஒருபோதும் மன்னிக்க மாட்டார்கள். 2026ம் ஆண்டு சட்டசபை தேர்தலில் தக்க பதிலடி கொடுப்பார்கள். இவ்வாறு நயினார் நாகேந்திரன் கூறியுள்ளார்.

# ஜம்மு எல்லையில் பற்றிய காட்டுத் தீ: பலத்த சத்தத்துடன் வெடித்த கண்ணிவெடிகள்



பூஞ்ச். டிச.8-

ஜம்முகாஷ்மீரில் எல்லை கட்டுப்பாட்டு கோட்டு பகுதியில் காட்டுத்தீ காரணமாக கண்ணிவெடிகள் வெடித்து சிதறின.

பூஞ்ச் மாவட்டம் பாலகோட் செக்டரில் உள்ள எல்லை கட்டுப்பாட்டு கோட்டு பகுதியில் உள்ள காட்டில் திடீரென தீப்பிடித்தது. அப்போது அங்கு புதைத்து வைக்கப்பட்டு இருந்த கண்ணிவெடிகள் வெடித்துச் சிதறின. இந்த கண்ணிவெடிகள், பயங்கரவாத ஊடுருவல் தடுப்பு நடவடிக்கையாக வைக்கப்பட்டு இருந்தன. 6க்கும் மேற்பட்ட கண்ணிவெடிகள் பலத்த சத்தத்துடன் வெடித்தன. இருப்பினும் இந்த சம்பவத்தில் எவ்வித சேதாரமும் ஏற்பட்டதாக தகவல்கள் வெளியாகவில்லை.

இதுகுறித்து ராணுவ அதிகாரிகள் கூறுகையில், தீ பல அடி உயரத்திற்கு எரிந்தது. தீயை கட்டுப்படுத்தும் முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டன. நிலைமை தற்போது சீராக உள்ளது என்றனர்.

# அரசுப் பள்ளி மாணவர்களுக்கு தரம் குறைந்த இலவச சைக்கிள்; அண்ணாமலை கண்டனம்



கோவை, டிச.8-

கோவையில் அரசுப் பள்ளி மாணவர்களுக்கு, இலவச சைக்கிள் திட்டத்தின் கீழ் வழங்கப்பட்ட சைக்கிள்கள், தரமற்ற உதிரிபாகங்களுடன் வழங்கப்பட்டுள்ளது வன்மையாகக் கண்டிக்கத்தக்கது, என்று பாஜ மாநில முன்னாள் தலைவர் அண்ணாமலை தெரிவித்துள்ளார்.

அவரது அறிக்கை: கோவை ஒண்டிப்புதூர் அரசு மேல்நிலைப்பள்ளியில், 11ம் வகுப்பு மாணவர்கள் 117 பேருக்கு, கோவை எம்பி மற்றும் மாவட்ட கலெக்டர் பங்கேற்று வழங்கிய சைக்கிள்கள், சரியாகப் பொருத்தப்படாமலும், சில உதிரிபாகங்கள் இல்லாமலும் வழங்கப்பட்டுள்ளன. தமிழகப் பள்ளி மாணவர்களுக்கு, இலவச சைக்கிள் திட்டத்தின் கீழ் வழங்கப்பட்ட சைக்கிள்கள், இப்படி தரமற்ற உதிரிபாகங்களுடன் வழங்கப்பட்டுள்ளது வன்மையாகக் கண்டிக்கத்தக்கது.

கடந்த ஆண்டுகளிலும், இது போன்ற தரம் குறைந்த சைக்கிள்கள் வழங்கப்பட்டதால், மாணவர்கள் அவற்றை நீண்ட காலம் பயன்படுத்த முடியாமல், தங்கள் சொந்த செலவில் பழுது பார்த்தும், பல மாணவர்கள் அவற்றை விற்பனை செய்ததாகவும் செய்திகள் வெளிவந்தன. ஒவ்வொரு ஆண்டும், குறிப்பாக கோவை மாவட்டத்தில் இதே பிரச்சினை தொடர்கிறது. இந்த சைக்கிள் ஒப்பந்ததாரர்கள் யார்? ஏன் தொடர்ந்து தரம் குறைந்த சைக்கிள்கள் கோவை பள்ளி மாணவர்களுக்குக் கொடுக்கப்படுகின்றன?

கோவையில் மட்டும் இந்த ஆண்டு, 17,782 மாணவர்களுக்கு சைக்கிள்கள் வழங்கப்பட வேண்டும். ஒவ்வொன்றும் சுமார் 4 ஆயிரத்து 300 ரூபாய் விலை என்று திமுக அரசால் கூறப்படும் சைக்கிள்கள், இப்படி அடிப்படைக் குறைபாடுகளைக் கூட சரிசெய்யாமல் மாணவர்களுக்கு வழங்கப்பட்டுள்ளதை ஏற்றுக்கொள்ளவே முடியாது.

கோவை மட்டுமின்றி, தமிழகம் முழுவதுமே, அனைத்து சைக்கிள்களும், தர பரிசோதனை நடத்திய பின்னரே வழங்கப்பட வேண்டும் என்றும், தரம்குறைந்த சைக்கிள்கள் வழங்கும் ஒப்பந்ததாரர்கள் மீது கடுமையான நடவடிக்கை எடுக்க வேண்டும், இவ்வாறு அவர் குறிப்பிட்டுள்ளார்.

# அமெரிக்காவில் வீட்டில் பற்றிய தீ: காயமடைந்த இந்திய மாணவி உயிரிழப்பு



நியூயார்க். டிச.8-

அமெரிக்காவில் வீட்டில் ஏற்பட்ட தீயால் பலத்த காயமடைந்த 24 வயது இந்திய மாணவி உயிரிழந்தார்.

தெலுங்கானாவைச் சேர்ந்த 24 வயது சஹஜா ரெட்டி உடுமலா, அமெரிக்காவின் நியூயார்க், அல்பானி நகரில் வசித்து வந்தார். சஹஜா மூன்று ஆண்டுகளுக்கு முன் சைபர் செக்யூரிட்டியில் ( இணைய பாதுகாப்பு) முதுகலைப் பட்டம் பெற அமெரிக்கா சென்றார், சில மாதங்களுக்கு முன்புதான் வேலைக்குச் சேர்ந்தார். அவரது தந்தை ஒரு தகவல் தொழில்நுட்ப நிபுணர் மற்றும் அவரது தாய் ஒரு ஆசிரியர். டிசம்பர் 4ம் தேதி வீட்டில் தனது அறையில் தூங்கிக்கொண்டிருந்தபோது தீ பற்றியது. பலத்த காயமடைந்த அவர் மருத்துவமனையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டிருந்தார். தீவிர சிகிச்சை அளித்தும் பலனின்றி அவர் உயிரிழந்தார்.

போலீஸ் அதிகாரிகள் கூறியதாவது: வீட்டில் தீ பரவியது குறித்து தகவல் அறிந்து தீயணைப்பு வீரர்கள் சம்பவ இடத்திற்கு சென்றனர். அங்கு பலத்த காயமடைந்த சஹஜாவை மீட்டு மருத்துவமனைக்கு கொண்டு செல்லப்பட்டார், துரதிர்ஷ்டவசமாக, காயமடைந்த பெண் உயிரிழந்தார் என்றனர்.

இது குறித்து நியூயார்க்கில் உள்ள இந்திய தூதரகம் தனது எக்ஸ் தளப்பதிவில் கூறியிருப்பதாவது: அல்பானியில் ஏற்பட்ட தீ விபத்தில் உயிரிழந்த உடுமாலாவின் அகால மறைவால் மிகவும் வருத்தமடைந்துள்ளோம்.

இந்த கடினமான நேரத்தில் அவரது குடும்பத்தினருக்கு இரங்கல் தெரிவிக்கின்றோம். மேலும் உடுமலாவின் குடும்பத்தினருடன் தொடர்பில் இருக்கிறோம். அவர்களுக்கு தேவையான அனைத்து உதவிகளையும் வழங்கி வருகிறோம்.

இவ்வாறு இந்திய தூதரகம் பதிவிட்டுள்ளது.

# விரிவான விசாரணை நடத்தணும்; கோவா தீ விபத்து சம்பவத்தில் ராகுல் வலியுறுத்தல்



புதுடில்லி. டிச.8-

கோவாவில் 25 பேர் உயிரிழந்த சம்பவத்தில் பாதுகாப்பு மற்றும் நிர்வாகத்தில் அரசு கிரிமினல் தோல்வியடைந்துள்ளது என காங்கிரஸ் எம்பி ராகுல் குற்றம்சாட்டியுள்ளார்.

கோவாவின் அர்போரா பகுதியில் உள்ள இரவு விடுதியில் அதிகாலை ஏற்பட்ட தீவிபத்தில் 25 பேர் பரிதாபமாக உயிரிழந்துள்ளனர். இச்சம்பவத்துக்கு ஜனாதிபதி திரவுபதி முர்மு, பிரதமர் மோடி உள்ளிட்டோர் இரங்கல் தெரிவித்துள்ளனர்.

இச்சம்பவம் தொடர்பாக ராகுல் வெளியிட்ட அறிக்கையில் கூறியுள்ளதாவது: கோவாவில் 25 பேரின் உயிரை பறித்த தீவிபத்து வேதனை அளிக்கிறது. உயிரிழந்தவர்களின் குடும்பங்களுக்கு எனது மனமார்ந்த இரங்கல் தெரிவித்துக் கொள்கிறேன். காயமடைந்தவர்கள் விரைவில் குணமடைய வேண்டும்.

இது சாதாரண விபத்து அல்ல. நிர்வாகம் மற்றும் பாதுகாப்பில் ஏற்பட்ட கிரிமினல் தோல்வி. விபத்துக்கு காரணமானவர்களை கண்டுபிடிக்க வெளிப்படையான மற்றும் விரிவான விசாரணை நடத்துவதுடன், இதுபோன்ற நிகழ்வுகள் எதிர்காலத்தில் நடக்காமல் இருக்க நடவடிக்கை எடுக்கவேண்டும். இவ்வாறு அந்த அறிக்கையில் ராகுல் கூறியுள்ளார்.

# நீதிபதி தீர்ப்பிற்கு எதிராக கோஷம் எழுப்பிய தி.மு.க., எம்.எல்.ஏ., மகனுக்கு எச்சரிக்கை



அவனியாபுரம். டிச.8-

மதுரை விமான நிலையத்தில், முதல்வர் வருகையின் போது, நீதிபதி ஜி.ஆர்.சுவாமிநாதன் அளித்த திருப்பரங்குன்றம் மலையில் தீபம் ஏற்றுவது தொடர்பான தீர்ப்பிற்கு எதிராக கோஷம் எழுப்பிய தி.மு.க., எம்.எல்.ஏ., மகனை, போலீசார் எச்சரித்து அனுப்பினர்.

மதுரையில் பல்வேறு நிகழ்ச்சிகளில் பங்கேற்ற முதல்வர் ஸ்டாலின், நேற்று மதியம், சென்னை செல்வதற்காக மதுரை விமான நிலையம் வந்தார். முதல்வரை வரவேற்று தொண்டர்கள் கோஷங்கள் எழுப்பினர். அப்போது ஒருவர், திருப்பரங்குன்றத்தில் தீபம் ஏற்றுவது தொடர்பான வழக்கில், நீதிபதி தீர்ப்பிற்கு எதிராக கோஷங்களை எழுப்பினார்.

அவரை போலீசார் அழைத்துச்சென்றனர். அவரிடம் நிருபர்கள், 'என்ன கோஷம் எழுப்பினீர்கள்?' என்று கேட்டதற்கு, 'திருப்பரங்குன்றம் விவகாரத்தில் மத கலவரத்தை தூண்டுகின்றனர்' என்றார். அப்போது, போலீசார் அந்த நபரின் வாயை மூடி, போலீஸ் அதிகாரியின் வாகனத்தில் ஏற்றி அழைத்துச் சென்றனர்.

அவரிடம் நடத்திய விசாரணையில், அவர், தூத்துக்குடி மாவட்டம், விளாத்திகுளம் தி.மு.க., எம்.எல்.ஏ., மார்க்கண்டேயனின் மகன் அக்ஷய், 22, என்பதும், டில்லி சட்ட கல்லூரியில் படிக்கிறார் என்பதும் தெரிந்தது. அவரை, போலீசார் எச்சரித்து அனுப்பினர்.

அக்ஷய், தன் தந்தை மார்க்கண்டேயனுடன் எட்டையபுரத்தில் அளித்த பேட்டி:நீதிபதி சுவாமிநாதன் பாசிச கருத்துகளையும், சொந்த கருத்துகளையும் தீர்ப்பில் இணைத்து எழுதியதை போல எனக்கு தென்பட்டது. அவர் ஒரு நிகழ்ச்சியிலும், தீர்ப்பு மூலமாக தான் தீபத்தை ஏற்ற முடியவில்லை; அரங்கத்தில் தீபம் ஏற்றுகிறேன் என, பேசியிருந்தார்.

தொடர்ந்து, முதல்வர் புரட்சிகரமான ஒரு அறிக்கையை கொடுத்தார். சட்டரீதியாக நாம் பார்த்து கொள்ளலாம் என, முதல்வர் ஸ்டாலின் கூறியிருந்தார். அந்த தைரியத்தில் தான் விமான நிலையத்தில், 'நீதிபதி சுவாமிநாதன் ஒழிக' என, கோஷம் எழுப்பினேன்.

இவ்வாறு அவர் கூறினார்.

# இன்று 1650 விமான சேவை; இண்டிகோ நிறுவனம் அறிவிப்பு



புதுடில்லி, டிச.8-

நாடு முழுவதும் தினசரி இயக்கப்பட வேண்டிய 2,300 விமானங்களுக்கு பதிலாக, இன்று 1650 விமானங்களே இயக்கப்பட்டதாக இண்டிகோ விமான நிறுவனம் அறிவித்துள்ளது. நேற்று இருந்ததை காட்டிலும், இன்று டிச.,7ல் சேவை எண்ணிக்கை அதிகரித்துள்ளதாகவும் கூறியுள்ளது.

ஆமதாபாத் விமான விபத்தின் எதிரொலியாக விமானிகளின் பணி நேர விதிகளில் அண்மையில் மத்திய அரசு மாற்றத்தை அறிவித்தது. அதற்கு தகுந்தபடி, தனது விமானிகளின் பணிநேர மாற்றங்களை சரியாக திட்டமிட்டு இண்டிகோ நிறுவனம் செயல்படுத்தவில்லை.

இதன் காரணமாக, புதிய பணி விதிகள் அமலுக்கு வந்ததும் பைலட்டுகள் பற்றாக்குறை ஏற்பட்டது; நாடு முழுவதும் இண்டிகோ விமான சேவைகள் ஸ்தம்பித்தன. தினமும் நூற்றுக்கணக்கான இண்டிகோ விமானங்களின் சேவை ரத்து செய்யப்படுகிறது. ஆயிரக்கணக்கான பயணிகள் தினமும் இதனால் கடும் பாதிப்பை சந்தித்து வருகின்றனர். கிட்டத்தட்ட ஒரு வாரமாக நீடிக்கும் இந்த பிரச்னைக்கு தீர்வு காணும் நடவடிக்கையில் மத்திய அரசும் தீவிரமாக இறங்கி உள்ளது.

இந் நிலையில், இன்றும் அடுத்தடுத்து விமானங்கள் ரத்து செய்யப்பட்டன. முக்கிய நகரங்களில் ரத்து செய்யப்பட்ட விமான சேவைகளின் எண்ணிக்கை;

ஹைதராபாத் 115 விமானங்கள்.மும்பை 112 விமானங்கள்.புதுடில்லி 109 விமானங்கள்.

கோல்கட்டா 76 விமானங்கள்.ஆமதாபாத் 20 விமானங்கள்.புனே 25 விமானங்கள்.அகர்தலா 6 விமானங்கள்.திருச்சி 11 விமானங்கள்

வழக்கமாக நாள்தோறும் சராசரியாக இயக்கப்பட வேண்டிய 2300 விமானங்களில் 1650 விமானங்களை மட்டுமே இயக்கி வருவதாக இண்டிகோ நிறுவனம் அதிகாரப்பூர்வமாக அறிவித்துள்ளது. நேற்றைய தினம் 1500 விமான சேவைகள் இருந்த நிலையில் தற்போது அது அதிகரித்து 1650 ஆக உள்ளதாக இண்டிகோ கூறியுள்ளது.

# யானைகள் பலியாவதை தடுக்கும் ஏ.ஐ., தொழில்நுட்பம் விரிவாக்கம்: ரயில்வே துறை முடிவு



புதுடில்லி டிச.8-

ரயில் மோதி யானைகள் பலியாவதை தடுக்க உதவும் ஏ.ஐ., எனப்படும், செயற்கை நுண்ணறிவு தொழில்நுட்பத்துடன் கூடிய முறை, வட மாநிலங்களில் அமலில் உள்ள நிலையில், அதை மேலும் பல பகுதிகளுக்கு நீட்டிக்க ரயில்வே துறை முடிவு செய்துள்ளது.

மஹாராஷ்டிரா, ஜார்க்கண்ட், மேற்கு வங்கம், தமிழகம், கேரளா உட்பட பல மாநிலங்களில் வனப் பகுதிகளை ஒட்டி ரயில் தடங்கள் அமைந்துள்ளன.

உணவுப் பொருட்களை தேடி செல்லும் யானைகள், ரயில் மோதி பலியாவது தொடர்கதையாக உள்ளன.

இதை தடுக்க ரயில் பாதையின் இருபுறங்களிலும் நவீன கேமராக்கள் பொருத்தப்பட்ட உயர்மின் கோபுரங்கள் அமைத்தல், யானைகள் செல்ல சுரங்கப் பாதையை ஏற்படுத்துதல், ஒலிபெருக்கி வாயிலாக எச்சரித்தல் போன்ற நடவடிக்கைகள் ரயில்வே துறையால் மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

இந்த விவகாரத்தில் எடுக்கப்பட்ட நடவடிக்கைகள் குறித்து, ராஜ்யசபாவில் மத்திய ரயில்வே அமைச்சர் அஸ்வினி வைஷ்ணவ் எழுத்துப்பூர்வ மாக அளித்த பதில்:

ரயில் பாதைகளில் யானைகள் பலியாவதை தடுக்க, ஏ.ஐ., தொழில்நுட்பத்துடன் செயல்படும் ஐ.டி.எஸ்., எனப்படும் ஊடுருவல் கண்டறிதல் அமைப்பு, வடகிழக்கு மாநிலங்களில் தற்போது பயன்படுத்தப்பட்டு வருகிறது.

ரயில்வே பாதையில், 141 கி.மீ., துாரத்துக்கு செயல்படுத்தப்பட்டுள்ள இந்த முறை, விரைவில் நாடு முழுதும் பல்வேறு வழித்தடங்களில், 981 கி.மீ.,க்கு விரிவுபடுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. இதற்காக, வனத் துறை மற்றும் தனியார் நிறுவனங்களுடன் ஒப்பந்தங்கள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

இருப்பு பாதை அருகே யானைகளின் நடமாட்டம் கண்டறியப்படும் போதெல்லாம், லோகோ பைலட்டுகள், நிலைய மேலாளர்கள் மற்றும் கட்டுப்பாட்டு அறைகளுக்கு, எச்சரிக்கை சிக்னலை வழங்கும் ஒலி உணர்திறன் தொழில்நுட்பமும் தற்போது பயன்படுத்தப்பட்டு வருகிறது.

இது, அதிக ஆபத்து மண்டலங்களில் விரைவான தடுப்பு நடவடிக்கையை செயல்படுத்துகிறது.

இது மட்டுமின்றி ஏ.ஐ., தொழில்நுட்பத்தின் அடிப்படையில், யானைகள் வருவதை முன்பே கணிக்கும் முறையும், சில வழித்தடங்களில் சோதனை அடிப்படையில் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

இவ்வாறு அதில் கூறப்பட்டுள்ளது.

# ரஷ்ய அதிபரின் விருந்தில் ராகுல், கார்கேவுக்கு அழைப்பில்லை: சிவசேனா எம்.பி. பிரியங்கா சதுர்வேதி விமர்சனம்



புதுடெல்லி. டிச.8-

இந்தியா வந்த ரஷ்ய அதிபர் விளாடிமிர் புதினுக்கு, குடியரசுத் தலைவர் திரவுபதி முர்மு சார்பில் விருந்து அளிக்கப்பட்டது. இந்த விருந்தில் காங்கிரஸ் மூத்த தலைவர்கள் கார்கே, ராகுல் காந்தி ஆகியோருக்கு அழைப்பு விடுக்கப்படவில்லை. அதேநேரத்தில் முன்னாள் மத்திய அமைச்சர் சசி தரூருக்கு அழைப்பு விடுக்கப்பட்டிருந்தது.

இதுதொடர்பாக சிவசேனா (உத்தவ்) எம்.பி. பிரியங்கா சதுர்வேதி தனது எக்ஸ் பக்கத்தில் கூறியதாவது: இது அற்பமான செயல். குடியரசுத் தலைவர் பதவி என்பது எந்த அரசியல் கட்சியுடனும் தொடர்புடையது அல்ல. கட்சி சாராதது ஆகும். அனைத்து கட்சியினரையும் சமமாக நடத்த வேண்டும்.

அனைத்துக் கட்சித் தலைவர்களையும் குடியரசுத் தலைவர் அழைத்திருக்க வேண்டும். ஆளுங்கட்சித் தரப்பு மட்டுமே அழைக்கப்பட்டது மிகவும் அற்பமானது. இவ்வாறு அவர் கூறியுள்ளார்.

# “விஜய் கூட்டத்தில் தமிழகத்தைச் சேர்ந்தோருக்கு அனுமதி இல்லை” புதுச்சேரி காவல்துறை அறிவிப்பு



புதுச்சேரி. டிச.8-

விஜய் கூட்டத்துக்கு புதுச்சேரியினர் 5 ஆயிரம் பேருக்கு மட்டுமே அனுமதி உண்டு. குழந்தைகள், கர்ப்பிணிகள், தமிழகத்தைச் சேர்ந்தோருக்கு அனுமதியில்லை என்று காவல்துறை கட்டுப்பாடுகளை தெரிவித்துள்ளது.

புதுச்சேரியில் ரோடு ஷோ நடத்த தவெகவினர் முதல்வர் ரங்கசாமி, டிஜிபி அலுவலகத்தில் மனு தந்தனர். பலமுறை தவெக செயலாளர் புஸ்ஸி ஆனந்த் வந்து முயற்சித்தும் அதற்கு அனுமதி தரவில்லை.

இச்சூழலில் உப்பளம் புதிய துறைமுகம் எக்ஸ்போ மைதானத்தில் பொதுக்கூட்டம் செவ்வாய்க்கிழமை நடத்த அனுமதி தரப்பட்டுள்ளது. இந்நிலையில் புதுச்சேரி முதுநிலை காவல் கண்காணிப்பாளர் கலைவாணன் இன்று இரவு வெளியிட்ட உத்தரவு: தவெக பொதுக்கூட்டத்துக்கு அக்கட்சி நிர்வாகிகள் கோரியப்படி 5 ஆயிரம் பேர் மட்டுமே அனுமதிக்கப்படுவார்கள்.

தவெக கட்சி தரப்பில் தரப்படும் க்யூஆர் கோடு கொண்ட நுழைவுச்சீட்டு வைத்திருப்போர் மட்டுமே அனுமதிக்கப்படுவார்கள். க்யூஆர் கோடு நுழைவுசீட்டு இல்லாதோருக்கு அனுமதியில்லை என்பதால் பொதுமக்கள் அரங்குக்கு வரவேண்டாம். அது சிரமத்தை ஏற்படுத்தும்.

முக்கியமாக குழந்தைகள், கர்ப்பிணி பெண்கள், முதியவர்கள் நிகழ்வில் பங்கேற்க அனுமதி இல்லை. புதுச்சேரியில் வசிப்போருக்கு மட்டுமே க்யூ ஆர் கோடு நுழைவு சீட்டு தரப்பட்டு, இங்கு வசிப்போர் மட்டுமே அனுமதிக்கப்படுவார்கள். புதுச்சேரி அருகேயுள்ள தமிழக மாவட்டங்களில் வசிப்போர் உப்பளம் மைதானத்துக்குள் நுழைய அனுமதியில்லை.

வாகனங்களை நிறுத்த பாண்டி மெரினா, ஸ்டேடியத்தின் பின்புறம், பழைய துறைமுகப்பகுதி ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. சாலையோரத்திலோ, அரங்கின் உள்ளேயோ வாகன நிறுத்துமிடம் கண்டிப்பாக தடை செய்யப்பட்டுள்ளது. போதிய குடிநீர், கழிப்பறை வசதிகள், ஆம்புலன்ஸ்கள், முதலுதவி மருந்துவ குழுக்கள், தீயணைப்பு இயந்திரங்கள், அவசர காலத்தில் வெளியேறும் வழிகள் போன்ற ஏற்பாடுகளை தவெக செய்திருக்க அறிவுறுத்தப்பட்டுள்ளது. நிகழ்வில் பாதுகாப்பு நடத்தையை உறுத்தி செய்ய பொதுமக்கள் ஒத்துழைக்க வேண்டும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

# பிரதமர் மோடியின் உதவியை நாடும் பாகிஸ்தான் பெண்



புதுடில்லி, டிச.8-

கணவர் தன்னை கைவிட்டு டில்லியில் இரண்டாவது திருமணம் செய்ய உள்ளதாகவும், தனக்கு நீதி கிடைக்க பிரதமர் மோடி உதவி செய்ய வேண்டும் என பாகிஸ்தானிய பெண் ஒருவர் வீடியோ வெளியிட்டுள்ளார்.

பாகிஸ்தானின் கராச்சி நகரைச் சேர்ந்தவர் நிகிதா. இவருக்கும், அந்நாட்டை சேர்ந்த விக்ரம் என்பவருக்கும், ஹிந்து பாரம்பரிய முறைப்படி கராச்சியில் திருமணம் நடந்தது. திருமணம் முடிந்த பிறகு 2020 பிப்.,26 ல் நிகிதாவை இந்தியாவுக்கு விக்ரம் அழைத்து வந்தார். இவர், நீண்ட கால விசாரவில் மத்திய பிரதேச மாநிலத்தில் வசித்து வருகிறார்.

அதே ஆண்டு ஜூலை மாதம் விசாவில் பிரச்னை எனக்கூறி, நிகிதாவை அட்டாரி எல்லை வழியாக பாகிஸ்தானுக்கு வலுக்கட்டாயமாக அனப்பிவைத்துள்ளார். அதன் பிறகு அவரை , விக்ரம் தொடர்பு கொள்ளவில்லை. தன்னை அழைக்க முயற்சிக்கவில்லை என நிகிதா குற்றம்சாட்டியுள்ளார்.

இது தொடர்பாக நிகிதா வெளியிட்ட வீடியோவில் கூறியதாவது: என்னை அழைத்துக் கொள்ளும்படி பல முறை விக்ரமிடம் வலியுறுத்தினேன். ஆனால், ஒவ்வொரு முறையும் அவர் மறுத்து வருகிறார்.

திருமணம் முடிந்து கணவர் வீட்டிக்கு வந்த போது, மாமியார், மாமனார் உள்ளிட்டோரின் நடவடிக்கைகள் முற்றிலும் மாறின. எனது உறவுப்பெண் ஒருவருடன், விக்ரமுக்கு திருமணத்தை மீறிய உறவு உள்ளது. இதனை மாமனாரிடம் தெரிவித்த போது, ஆண்கள் அப்படி செய்வது வழக்கம். அதில் ஒன்றும் செய்ய முடியாது எனத் தெரிவித்தார்.

எனக்கு நீதி கிடைக்காவிட்டால், பெண்கள் அனைவரும் நீதி மீது வைத்திருக்கும் நம்பிக்கையை இழந்துவிடுவார்கள். ஏராளமான பெண்கள், திருமணமான பின்பு உடல் மற்றும் மன ரீதியாக பிரச்னைகளை சந்தித்து வருகின்றனர். அனைவரும் எனக்கு ஆதரவாக நிற்க வேண்டும். எனக்கு நீதி கிடைக்க பிரதமர் உதவி செய்ய வேண்டும் எனத் தெரிவித்துள்ளார்.

விக்ரம் டில்லியைச் சேர்ந்த பெண் ஒருவருடன் இரண்டாவது திருமணம் செய்ய முயற்சி செய்வதாக குற்றம்சாட்டியுள்ள நிகிதா, இது குறித்து புகார் அளித்துள்ளார். இது தொடர்பாக மபி ஐகோர்ட் அமைத்த சட்ட உதவி மையம் விசாரணை நடத்தியது. விக்ரமுக்கும் அவர் திருமணம் செய்ய உள்ள பெண்ணுக்கும் நோட்டீஸ் அனுப்பப்பட்டது. ஆனால், சமரச முயற்சி தோல்வியடைந்தது.இந்த வழக்கில் மத்திய அரசு தாக்கல் செய்த மனுவில், பாதிக்கப்பட்ட பெண் இந்தியாவைச் சேர்ந்தவர் இல்லை என்பதால், இந்த விவகாரம் பாகிஸ்தான் சட்ட வரம்பில் வருகிறது. விக்ரமை பாகிஸ்தானுக்கு நாடு கடத்த உத்தரவிடும்படி தெரிவித்து இருந்தது.

இது குறித்து விசாரணைக்கு உத்தரவிடப்பட்டுள்ளது எனவும், அறிக்கை அடிப்படையில் நடவடிக்கை எடுக்கப்படும் என மாவட்ட கலெக்டர் ஆஷிஸ் சிங் தெரிவித்துள்ளார்.

# இந்தியாவை அச்சுறுத்தினால் கடும் பதிலடி; கடற்படை தளபதி எச்சரிக்கை



புதுடில்லி, டிச.8-

இந்தியாவை யாரும் அச்சுறுத்தினால், கடும் பதிலடியை எதிர்கொள்ள நேரிடும் என இந்திய கடற்படை தளபதி அட்மிரல் திரிபாதி எச்சரிக்கை விடுத்துள்ளார்.

ராணுவத்தினர் கொடி தினத்தை முன்னிட்டு கடற்படைத் தளபதி அட்மிரல் திரிபாதி கூறியதாவது: டில்லியில் மத்திய ஆயுதப்படை வாரியத்தால், இன்று நடத்தப்பட்ட நிகழ்ச்சி சிறப்பாக இருந்தது. ஏற்பாட்டாளர்களை வாழ்த்துகிறேன். டில்லியின் துணைநிலை கவர்னர், முதல்வர் மற்றும் வாரியத்திற்கு நன்றி தெரிவித்து கொள்கிறேன்.

சங்க உறுப்பினர்கள் மற்றும் குழந்தைகளை சந்தித்தது மகிழ்ச்சியளிக்கிறது. சமூகத்தின் பிற மக்களைச் சந்திக்க எங்களுக்கு வாய்ப்பு கிடைத்தது. மேலும் குழந்தைகளின் நிகழ்ச்சியைக் கண்டது மிகவும் மகிழ்ச்சியாக இருந்தது. நமது ஆயுதப்படைகள், ராணுவம், கடற்படை, விமானப்படை தொடர்ந்து பெருமையுடன் தேசத்திற்கு சேவை செய்கின்றன.

ஆபரேஷன் சிந்தூர் போன்ற நடவடிக்கைகள் நமது உறுதியைக் காட்டுகின்றன. இந்தியாவை யாரும் அச்சுறுத்தினால், கடும் பதிலடியை எதிர்கொள்ள நேரிடும். இதை ஆபரேஷன் சிந்தூரின் போது நாங்கள் நிரூபித்தோம், எதிர்காலத்திலும் அதை நிரூபிப்போம்.

ஆபரேஷன் சிந்தூர் ராணுவ நடவடிக்கை நிறுத்தப்பட்டிருந்தாலும், அது இன்னும் முடிவடையவில்லை. அந்த நேரத்தில் மத்திய அரசு எடுத்த நடவடிக்கைகள் குறித்தும் நீங்கள் அறிந்திருப்பீர்கள். இந்த நாட்டின் மக்கள் ஆயுதப்படைகளைப் பற்றி பெருமைப்படுகிறார்கள் என்பதை நான் உணர்கிறேன். இவ்வாறு கடற்படை தளபதி அட்மிரல் திரிபாதி தெரிவித்தார்.

# தமிழகத்தில் 6 நாட்களுக்கு மிதமான மழை பெய்ய வாய்ப்பு



சென்னை. டிச.8-

தமிழகத்தில் ஓரிரு இடங்களில் இன்று முதல் 29ம் தேதி வரை மிதமான மழை பெய்ய வாய்ப்பு உள்ளது.

இதுதொடர்பாக சென்னை வானிலை ஆய்வு மையம் வெளியிட்ட செய்திக்குறிப்பில் கூறியுள்ளதாவது: மத்திய மேற்கு வங்கக்கடல் மற்றும் அதை ஒட்டிய பகுதிகளின் மேல் ஒரு வளிமண்டல மேலடுக்கு சுழற்சி நிலவுகிறது. இதன் காரணமாக தமிழகத்தில் ஒருசில இடங்களில் இன்று முதல் 29ம் தேதி வரை லேசானது முதல் மிதமான மழை பெய்ய வாய்ப்பு உள்ளது.

சென்னை மற்றும் புறநகர் பகுதிகளில் இன்று வானம் ஓரளவு மேக மூட்டத்துடன் காணப்படும். நகரின் ஒருசில பகுதிகளில் லேசான மழை பெய்யக்கூடும்.

தமிழகத்தில் நேற்று காலை 8.30 மணி வரையிலான 24 மணி நேரத்தில் அதிகபட்சமாக கோவை மாவட்டம் சின்னக்கல்லாறில் 11 செ.மீ., சோலையாறில் 10 செ.மீ., சின்கோனாவில் 9 செ.மீ., வால்பாறையில் 8 செ.மீ., கோவை மாவட்டம் ‘உபாசி’, கடலூர் மாவட்டம் லால்பேட்டை, மயிலாடுதுறை மாவட்டம் கொள்ளிடத்தில் 7 செ.மீ., சென்னை சென்ட்ரல், கோவை மாவட்டம் ஆழியாறு, நீலகிரி மாவட்டம் ஃபார்வூட், அவலாஞ்சியில் 5 செ.மீ. மழை பதிவாகியுள்ளது. இவ்வாறு அதில் கூறப்பட்டுள்ளது.

# “சனாதனம் மக்களிடையே பிரிவினையை ஏற்படுத்துவதால் இந்த அரசு எதிர்க்கிறது” : அமைச்சர் சேகர்பாபு



சென்னை, டிச.8-

“இது சமாதானத்தை போற்றுகின்ற அரசு. சனாதனம் மக்களிடையே பிரிவினையை ஏற்படுத்துவதால் இந்த அரசு அதை எதிர்க்கின்றது” என இந்து சமய அறநிலையத்துறை அமைச்சர் பி.கே.சேகர்பாபு தெரிவித்துள்ளார்.

இந்து சமய அறநிலையத்துறை அமைச்சர் பி.கே.சேகர்பாபு சென்னை, மண்ணடி அருள்மிகு காளிகாம்பாள் கமடேஸ்வரர் திருக்கோயிலில் ரூ. 40 இலட்சம் மதிப்பீட்டில் திருக்கோயிலின் 5 நிலை ராஜகோபுரத்தினை உயர்த்தும் திருப்பணிகளை தொடங்கி வைத்தார். அதனைத் தொடர்ந்து, சென்னை, பூங்கா நகரில் தமிழ்நாட்டு திருக்கோயில் உபயதாரர்கள் சார்பில் சபரிமலை ஐயப்ப பக்தர்களுக்கு வழங்கிடும் வகையில் முதற்கட்டமாக 5 லட்சம் பிஸ்கட் பாக்கெட்டுகளை 4 கண்டெய்னர் லாரிகள் மூலம் அனுப்பி வைக்கும் பணிகளை கொடியசைத்து தொடங்கி வைத்தார்.

பின்னர் இந்து சமய அறநிலையத்துறை அமைச்சர் சேகர்பாபு செய்தியாளர்களிடம் தெரிவித்ததாவது: முதல்வரின் நல்வழிகாட்டுதலின்படி வரும் ஜனவரி மாதத்திற்குள் 4,000 திருக்கோயில்களின் குடமுழுக்கு நிறைவு செய்து இந்து சமய அறநிலையத் துறை வரலாற்றில் ஒரு மிகப்பெரிய ஆன்மிக புரட்சியை அமைதியாக நடத்திக் கொண்டிருக்கின்றது,

சென்னை அருள்மிகு காளிகாம்பாள் திருக்கோயிலுக்கு கடந்த 2013 ஆம் ஆண்டு குடமுழுக்கு நடைபெற்றுள்ள நிலையில் 12 ஆண்டுகளுக்கு பிறகு, ரூ.2.33 கோடி மதிப்பீட்டில் 20 திருப்பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. அதன் தொடர்ச்சியாக திருக்கோயிலின் கிழக்கு இராஜகோபுரத்தை ரூ, 40 இலட்சம் மதிப்பீட்டில் நவீன தொழில்நுட்பத்தின் உதவியோடு தரை மட்டத்திலிருந்து 3 அடி உயர்த்தும் திருப்பணியை தொடங்கி வைத்தோம்.

இந்த அரசு பொறுபேற்ற பிறகு. உறுதித்தன்மை வாய்ந்த திருக்கோயில்கள், இராஜகோபுரங்கள் காலசூழ்நிலைக்கு ஏற்றார்போல் தரை மட்டம் உயர்ந்து இருக்கின்ற அளவில் அவற்றை இடித்து கட்டுவதற்கு பதிலாக பொதுப்பணித் துறையிடம் அனுமதி பெற்று, அதன் உறுதிதன்மையை உறுதி செய்த பின் தாழ்வாக இருக்கின்ற திருக்கோயில்களை உயர் நிலைக்கு (லிப்டிங்) கொண்டு வருகின்ற பணிகளை இந்து சமய அறநிலையத்துறை 25 திருக்கோயில்களில் மேற்கொண்டது.

அதில் 11 திருக்கோயில்களின் பணிகள் நிறைவுற்றுள்ளன. இதர 14 திருக்கோயில்களில் பணிகள் முழு வீச்சில் நடைபெற்று வருகின்றன. அதில் ஒரு திருக்கோயிலான வியாசர்பாடி, இரவீஸ்வரர் திருக்கோயிலை உயர்த்தும் பணிகள் நிறைவுறும் நிலையில் உள்ளது. வரும் பிப்ரவரி மாதம் இரண்டாவது வாரத்தில் அந்த அத்திருக்கோயிலுக்கு குடமுழுக்கு நடத்தப்பட உள்ளது.

சபரிமலை ஐயப்ப பக்தர்களுக்கு வழங்கிடும் வகையில் இன்றைய தினம் முதற்கட்டமாக 5 லட்சம் பிஸ்கட் பாக்கெட்டுகளை அனுப்பி வைக்கும் பணிகளை தொடங்கி வைத்துள்ளோம். இந்த மாத இறுதிக்குள் மேலும் 5 லட்சம் பிஸ்கட் பாக்கெட்டுகளும், 2026 ஜனவரி மாதத்தின் முதல் வாரத்தில் 5 லட்சம் பிஸ்கட் பாக்கெட்டுகளும் சபரிமலைக்கு அனுப்பி வைக்கப்படும்.

ஆன்மிகம் சார்ந்த பணிகள் மட்டுமல்லாமல் எந்த மாநில மக்களாக இருந்தாலும், பிற நாடுகளாக இருந்தாலும் உதவுகின்ற அரசுதான் திராவிட மாடல் அரசாகும். இலங்கையில் இயற்கை சீற்றத்தின் காரணமாக பாதிக்கப்பட்ட மக்களுக்கு உணவுப் பொருட்களை நேற்றைய தினம் முதல்வர் அனுப்பி வைத்ததை இந்த நேரத்தில் மனிதநேயத்தோடு கூற கடமைப்பட்டுள்ளேன்.

அதேபோல் ஆண்டுதோறும் ஐயப்பன் மலர் வழிபாட்டினை கடந்த 3 ஆண்டுகளாக நடத்தி, அதில் 40 ஆண்டுகளுக்கு மேலாக ஐயப்ப மலைக்கு சென்று வருகின்ற 108 குருசாமிகளுக்கு பொன்னாடை மற்றும் ஐயப்பன் உருவம் பொறித்த வெள்ளி டாலருடன் கூடிய துளசி மாலையையும் வழங்கி வருகின்றோம். இந்த ஆண்டும் ஐயப்பன் மலர் வழிபாடு விரைவில் கொண்டாடப்படும்.

தமிழகத்தை பொறுத்த அளவில் நான் பலமுறை சொல்லியது போல், ஜாதி, மதம், மொழிகளுக்கு அப்பாற்பட்டு செயல்படுகின்ற ஆட்சி முதல்வர் ஸ்டாலின் தலைமையில் நடைபெறுகின்ற ஆட்சியாகும். பாரதிய ஜனதா கட்சியினர் வட மாநிலங்களில் வேண்டுமென்றால் அவர்கள் நினைத்த மாதிரியான காரியங்கள், செயல்பாடுகள் ஈடேரலாம். ஆனால் இங்கு அவர்களின் கனவு பகல் கனவாக தான் இருக்கும். இது ராமானுஜர் வாழ்ந்த மண். ஆகவே மத ஒழுக்கம், மத ஒற்றுமை பேணி காக்கப்படும். இது போன்ற செயல்களை நிச்சயம் தமிழக மக்கள் அனுமதிக்க மாட்டார்கள். அனைத்து மக்களும் சகோதரத்துவத்தோடு வாழ்ந்து கொண்டிருக்கிறார்கள் என்பதை நண்பர் நயினார் நாகேந்திரன் அவர்களுக்கு தெரிவித்துக்கொள்கிறேன்.

சனாதனத்தை எவ்வளவு காலமானாலும் அழிக்க முடியாது என்று நயினார் நாகேந்திரன் அவர்கள் கூறியுள்ளாரே என செய்தியாளர்கள் கேட்டீர்கள், நாங்கள் எதையும் அழிக்க முயலவில்லை, எந்த ஒரு பொருளையும் மையப்படுத்தி மக்களை பிளவுபடுத்தக் கூடாது என்று தான் கூறுகிறோம். சமாதானம் என்பது மிக உயர்ந்த வார்த்தை. அனைத்து நிலையிலும் மக்களை சமமாக பார்ப்பது, ஆகவே இது சமாதானத்தை போற்றுகின்ற அரசு. சனாதனம் மக்களிடையே பிரிவினையை ஏற்படுத்துகின்றதால் அதை எதிர்க்கின்றது இந்த அரசு.

பழங்காலத்தில் தரையில் பெல்டி அடிப்பது தரை பெல்டி என்றும், மேலே அடிப்பது மேல் பெல்டி என்றும் கூறுவார்கள். ஆனால் அதிமுகவினர் அடிக்கின்ற பெல்டி ஆகாய பெல்டியாகும். அந்த கட்சியின் பொதுச்செயலாளர் என்று சொல்பவர் முதலில் தனி நீதிபதியின் தீர்ப்பை அமல்படுத்த வேண்டும் என்று கூறுகிறார், அவரை அடுத்து செய்தி தொடர்பாளராக இருக்கின்ற முன்னாள் அமைச்சர் ஏற்கனவே நீதித்துறை என்ன கூறியதோ அதை கையாள வேண்டும் என்று சொல்கிறார்.

ராஜன் செல்லப்பா அவர்கள் திருப்பரங்குன்றம் நிகழ்வில் நயினார் நாகேந்திரன் அவர்கள் காவல்துறை நடவடிக்கைக்கு உட்பட்ட போது அவரை சந்தித்து ஆதரவு தெரிவிக்கின்றார். அதேபோல் உள்ளதை உள்ளபடி சொல்லுகின்ற வல்லமை பெற்ற உள்ளூர் முன்னாள் அமைச்சர் செல்லூர் ராஜீ நிலைப்பாடு ஒன்று. ஆகவே ஆளாளுக்கு ஒரு கோணத்தை நோக்கி பயணித்துக் கொண்டிருக்கின்ற அந்த இயக்கமானது கொள்கையை விட்டு முழுவதுமாக பாரதிய ஜனதா கட்சியிடம் அடிமைப்பட்டு விட்டது. ஊர் கூடி தேர் இழுத்தால் தான், வடம் ஒழுங்காக சென்றால் தான் நிலையை அடையும். இன்றைக்கு அதிமுகவின் நிலை அப்படியல்ல. ஆகவே அந்த தேர் 2026ல் நிலையை அடையாது என்பதற்கு இதுபோன்ற நிகழ்வுகளை சான்றாகும்.

எச்.ராஜா அவர்களின் பேச்சையெல்லாம் ஒருபோதும் கணக்கில் எடுத்துக் கொள்ளக் கூடாது. ஒரு நிலையில் பார்த்தால் நீதிபதிகளை தனக்கு தலை மேல் இருக்கின்ற பொருளை மையமாக வைத்து பேசுவார். சில நேரம் நீதிபதிகளை ஆதரித்து பேசுவார், அரசு அதிகாரிகளை காலணிக்கு ஒப்பிட்டு பேசுவார். இப்படிப்பட்ட தரம் தாழ்ந்த அரசியல்வாதி தமிழகத்தில் இருப்பது எங்களைப் போன்ற நேர்மையாக, நல்லொழுக்கத்தோடு அரசியல் செய்பவர்களுக்கு சாபக்கேடாத கருதுகிறோம்.

திருப்பரங்குன்றத்தில் இந்த பிரச்சனையை கையில் எடுத்த பிறகு லட்சக்கணக்கான மக்கள் அந்த கிரிவலத்தில் பங்கேற்று உள்ளார்கள். இந்த அரசு முழுமையான பாதுகாப்பை பக்தர்களுக்கு வழங்கிக் கொண்டிருக்கிறது. அதோடு மட்டுமல்லாமல் கடையடைப்பு போராட்டம் என்று அறிவித்தார்கள். இயல்பு வாழ்க்கையை பாதிக்கப்படக்கூடாது என்பதற்காக மக்களே திரண்டு அந்தப் போராட்டத்திற்கு எதிர்ப்பு தெரிவித்து இருந்தார்கள். விரோதி பட்டியலில் இடம்பெற்று கொண்டே இருக்கின்ற தமிழ்நாட்டிலே இருக்கின்ற பாரதிய ஜனதா கட்சி இனிமேலாவது விழித்துக் கொள்ள வேண்டும்.

ருவொற்றியூர் அருள்மிகு தியாகராஜ சுவாமி திருக்கோயிலில் கார்த்திகை பௌர்ணமியன்று மாலை ஆதிபுரீஸ்வரர் கவசத்தை திறந்தார்கள். அன்றைய தினம் 50,000 மேற்பட்ட மக்கள் வருகை தந்திருக்கின்றார்கள். நான் அங்கு சென்றபோது பக்தர்களிடம் உங்களுக்கு குடிநீர் வசதி, மருத்துவ வசதி, கழிப்பிட வசதி ஏற்படுத்தி தருகின்றோம். உங்களால் முடியவில்லை என்றால் உடன் வாருங்கள், நான் அழைத்துச் செல்கிறேன் என்றுதான் பக்தர்களிடம் கூறினேன். ஒரு சிறு அசம்பாவிதமும் நடைபெறாமல் நேற்று நிறைவு பெற்றுள்ளது. விஐபி தரிசனம் என்பது திருக்கோயிலில் அவரவர்களின் பணி நேரம் காரணமாகவும் தேவை காரணமாகவும் இந்த சூழல் அமைகிறது.

ஊடகங்கள் நெகட்டிவ்வான விஷயங்களை பற்றி பேசும்போது பாசிட்டிவான விஷயங்களை எடுத்துக் கூற வேண்டும். குறைகள் இருந்தால் சுட்டிக்காட்டுங்கள், அதற்காக வருந்த மாட்டோம், கோபப்பட மாட்டோம். குறைகளை நிவர்த்தி செய்வோம். நேற்றைய தினம் காஞ்சிபுரத்தில் ஏகாம்பரேசுவரர் திருக்கோயிலுக்கு தங்கத் தேரை ஒப்படைத்த நிகழ்வில் நானும் கலந்து கொண்டேன். ஆறு கிலோ மீட்டர் தூரம் அந்த ரதம் ஊர்வலமாக கொண்டு வரப்பட்டது. ஒரு லட்சத்துக்கும் மேற்பட்ட பக்தர்கள் கண்டுகளித்தனர். ஆயிரக்கணக்கான மக்கள் கூடினாலும் லட்சக்கணக்கான மக்கள் கூடினாலும் அவர்களின் நலனை பாதுகாக்கும் அரசாக இந்த திராவிட மாடல் அரசு திகழும் என்று தெரிவித்தார்.

# வக்ஃப் வழிபாடு உரிமையை காப்போம் மீண்டும் பாபர் மசூதியை நிறுவுவோம் : எஸ்டிபிஐ ஆர்ப்பாட்டம்




■ திருப்பூர் குமரன் சிலை அருகே எஸ் டி பி ஐ சார்பில் மாபெரும் மக்கள் திரள் ஆர்ப்பாட்டம் நடைபெற்றது இதில் வக்ஃப் வழிபாடு உரிமையை காப்போம் மீண்டும் பாபர் மசூதியை நிறுவுவோம் என தொழிற்சங்க தேசிய பொதுச் செயலாளர் தஞ்சை முகமது பாரூக் சூளுரை மேலும் இதில் சிறுபான்மையினர் ஒற்றுமை. உள்ளிட்ட பல்வேறு விஷயங்களை பொதுமக்களிடம் மக்களிடம் எடுத்துரைத்தனர் இந்த ஆர்ப்பாட்டத்தில் திருப்பூர் வடக்கு மாவட்ட தலைவர் பஷீர் அகமது. வடக்கு மாவட்ட பொதுச் செயலாளர் அப்துல்வஹாப். தெற்கு மாவட்ட தலைவர் ஹாரிஸ் பாபு. தெற்கு மாவட்ட பொதுச் செயலாளர் முகமது ரபிக் மற்றும் நவீன மனிதர்களை இயக்கத்தின் சார்பில் பாரதி சுப்பராயன் மற்றும் எஸ்டிபிஐ சார்பில் மாநில மாவட்ட சட்டமன்ற தொகுதி நிர்வாகிகள் பொதுமக்கள் 500க்கும் மேற்பட்டோர் இந்த மக்கள் திரள் ஆர்ப்பாட்டத்தில் பங்கேற்றனர்

# மதுரை மாவட்டம் பந்தல்குடி வாய்க்கால் கட்டுமானப் பணிகள் முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் ஆய்வு

மதுரை, டிச.8-

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு.மு.க.ஸ்டாலின் அவர்கள் மதுரை மாவட்டம், பந்தல்குடி வாய்க்காலில் 69 கோடியே 21 இலட்சம் ரூபாய் செலவில் மேற்கொள்ளப்பட்டு வரும் கால்வாயின் இருபுறமும் வெள்ள தடுப்பு பக்கவாட்டு சுவர் கட்டும் பணிகள், கால்வாயில் தண்ணீர் செல்லும் திறனை மேம்படுத்துவதற்காக மண்படுகைத் தளத்தை கான்கிரீட் தளமாக மாற்றம் செய்யும் பணி உள்ளிட்ட பல்வேறு கட்டுமானப் பணிகளை பார்வையிட்டு ஆய்வு செய்தார். இந்த ஆய்வின்போது, மாண்புமிகு வணிக வரி மற்றும் பதிவுத் துறை அமைச்சர் பி.மூர்த்தி, மாண்புமிகு தகவல் தொழில்நுட்பவியல் மற்றும் டிஜிட்டல் சேவைகள் துறை அமைச்சர் முனைவர் பழனிவேல் தியாகராஜன், மதுரை மாவட்ட ஆட்சித்தலைவர் கே.ஜே. பிரவீன்குமார் இ.ஆ.ப. சட்டமன்ற உறுப்பினர்கள், தளபதி பூமிநாதன். வெங்கடேசன்,

மதுரை மாவட்ட ஆட்சித்தலைவர் கே.ஜே. பிரவீன்குமார், இ.ஆ.ப., மற்றும் அரசு உயர் அலுவலர்கள் உடனிருந்தனர்.



■ மதுரை மாவட்டம் திருப்பரங்குன்றம் மலைமீது அமைந்துள்ள அருள்மிகு முருகன் திருக்கோவிலில் அமைந்துள்ள தீபத்தூணில் கார்த்திகை தீபம் அன்று தீபம் ஏற்றுவதற்கு மதுரை உயர்நீதிமன்ற நீதி அரசர் ஜி ஆர் சுவாமிநாதன் உத்தரவு பிறப்பித்த நிலையில் உயர்நீதிமன்ற தீர்ப்பை மதிக்காத வகையிலும் தீபம் ஏற்ற விடாமலும் தொடர்ந்து இந்து மக்களை அவமதிக்கும் வகையிலும் நடந்து கொண்ட திராவிட முன்னேற்றக் கழகத்தை எதிர்த்து தமிழ்நாடு முழுவதும் மாநிலம் தழுவிய ஆர்ப்பாட்டத்தை இந்து முன்னணி அறிவித்த நிலையில் திண்டுக்கல் மாவட்டம் கொடைக்கானலில் இந்து முன்னணி கொடைக்கானல் நகரத் தலைவர் மோகன் ஜி மற்றும் பாரதிய ஜனதா கட்சியின் திண்டுக்கல் மேற்கு மாவட்ட துணைத் தலைவர் ஜி மதன்குமார் அவர்கள் தலைமையில் (7 /12 /2025) ஞாயிறு மாலை ஐந்து முப்பது மணி அளவில் ஆர்ப்பாட்டம் நடைபெற்றது. இதில் 70க்கும் மேற்பட்ட நிர்வாகிகள், இந்து பொதுமக்கள் மற்றும் தொண்டர்கள் கலந்து கொண்டனர் இந்த ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்ட அனைவரையும் கொடைக்கானல் காவல் ஆய்வாளர் வசந்தகுமார் மற்றும் துணை ஆய்வாளர் அபினேஷ் தலைமையில் அனைத்து இந்து முன்னணி மற்றும் பாரத ஜனதா கட்சியினரை கைது செய்து தனியார் மண்டபத்தில் வைத்து பின்னர் விடுத்தனர்

# முழு தகவல் தெரியாமல் பேசக் கூடாது; ராகுலுக்கு மத்திய அமைச்சர் பதிலடி



புதுடில்லி: டிச.8-

இண்டிகோ விமான சேவைகள் ரத்து விவகாரத்தில் முழு தகவல் தெரியாமல் பேசக்கூடாது என்று காங்கிரஸ் எம்பி ராகுலுக்கு விமானப் போக்குவரத்துத்துறை அமைச்சர் ராம் மோகன் நாயுடு தெரிவித்துள்ளார்.

இது குறித்து அவர் பேசியதாவது; இது ஒரு அரசியல் விவகாரம் அல்ல, பொதுப் பிரச்னை. ஒப்பந்த செலவுகளைக் குறைத்து, அதிக விமானங்களை அனுமதிக்கும் வகையில் சட்டத்தை நாங்கள் அறிமுகப் படுத்தியுள்ளோம். போட்டி அதிகரிக்க வேண்டும் என்று நான் எப்போதும் கூறிக் கொண்டே இருக்கிறேன்.

நாட்டில் விமானப் போக்குவரத்திற்கான தேவை நாளுக்கு நாள் அதிகரித்து வருகிறது. எனவே, இந்தத் துறையில் மக்கள் நுழைவதற்கு வாய்ப்புகள் உருவாகின்றன. அரசும் அதையேத்தான் விரும்புகிறது. முழு தகவல் தெரிந்தால் மட்டும் அவர் (ராகுல்) பேசுவது நல்லது, இவ்வாறு அவர் கூறினார்.

முன்னதாக, ஊழியர்கள் போராட்டம் உள்ளிட்ட பல்வேறு காரணங்களால் 6 நாட்களாக இண்டிகோ விமானங்களின் சேவை பாதிக்கப்பட்டுள்ளது.

இது குறித்து அரசின் மீது குறை கூறிய காங்கிரஸ் எம்பி ராகுல், 'இண்டிகோ விமான நிறுவனத்தின் தோல்விக்கு காரணமே மத்திய அரசின் அணுகுமுறையே காரணம். விமானங்களின் ரத்து, தாமதம் மற்றும் உதவியில்லாத நிலையால், சாதாரண இந்திய மக்கள் தான் பாதிக்கப்படுகிறார்கள். அனைத்து துறைகளிலும் நியாயமான போட்டிக்கு இந்தியா தகுதியுடையது,' இவ்வாறு அவர் குறிப்பிட்டிருந்தார்.



# மக்கள் விடுதலை கட்சியின் நிறுவனத் தலைவர் இல்ல திருமண விழாவிற்கு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் தலைமையேற்று நடத்தி வைத்து மணமக்களை வாழ்த்தினார்


மதுரை, டிச.8-

தமிழ்நாடு முதலமைச்சர் திரு.மு.க.ஸ்டாலின் அவர்கள் மதுரையில் நடைபெற்ற, மக்கள் விடுதலை கட்சியின் நிறுவனத் தலைவர் சு.கூ.முருகவேல்ராஜன் மகன் இந்திர தனுஷ் ராஜன் சாதனா ஆகியோரது திருமணத்தை தலைமையேற்று நடத்திவைத்து, மணமக்களை வாழ்த்தினார். இம்மணவிழாவில், மாண்புமிகு நகராட்சி நிர்வாகத் துறை அமைச்சர் கே.என்.நேரு, மாண்புமிகு பொதுப்பணிகள், நெடுஞ்சாலைகள் மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர் எ.வ.வேலு, மாண்புமிகு வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறை அமைச்சர் கே.கே. எஸ்.எஸ்.ஆர். ராமச்சந்திரன். மாண்புமிகு நிதி, சுற்றுச்சூழல் மற்றும் காலநிலை மாற்றத் துறை அமைச்சர் தங்கம் தென்னாக, மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் கே.ஆர். பெரியகருப்பன், மாண்புமிகு வனம் மற்றும் கதர்த்துறை அமைச்சர் ஆர்.எஸ். ராஜகண்ணப்பன், மாண்புமிகு வணிகவரி மற்றும் பதிவுத் துறை அமைச்சர் பி.மூர்த்தி, மாண்புமிகு தகவல் தொழில்நுட்பவியல்அமைச்சர் பி.டி.ஆர் பழனிவேல் தியாகராஜன். ஆகியோர்உள்ளிட்டோர் கலந்து கொண்டனர்.

# சிவகங்கை சாலை மேலமடை மேம்பாலத்திற்கு "வீரமங்கை வேலுநாச்சியார் மேம்பாலம்" என்று பெயர் சூட்டி திறந்து வைத்தார் முதலமைச்சர் மு.க.ஸ்டாலின்

தமிழ்நாடு முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் மதுரை மாவட்டம், சிவகங்கை சாலை மேலமடை சந்திப்பு பகுதியில் 150 கோடி ரூபாய் செலவில் கட்டப்பட்டுள்ள 4 வழித்தடச் சாலை சந்திப்பு மேம்பாலத்திற்கு "வீரமங்கை வேலுநாச்சியார் மேம்பாலம்" என்று பெயர் சூட்டி, பொதுமக்களின் பயன்பாட்டிற்காக திறந்து வைத்தார். இந்த நிகழ்ச்சியில், மாண்புமிகு நகராட்சி நிர்வாகத் துறை அமைச்சர் கே.என்.நேரு, மாண்புமிகு பொதுப்பணிகள், நெடுஞ்சாலைகள் மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர் எ.வ.வேலு, மாண்புமிகு வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறை அமைச்சர் கே.கே.எஸ்.எஸ்.ஆர். ராமச்சந்திரன், மாண்புமிகு நிதி, சுற்றுச்சூழல் மற்றும் காலநிலை மாற்றத் துறை அமைச்சர் திரு. தங்கம் தென்னரசு, மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் கே.ஆர். பெரியகருப்பன், மாண்புமிகு வனம் மற்றும் கதர்த்துறை அமைச்சர் ஆர்.எஸ். ராஜகண்ணப்பன், மாண்புமிகு வணிகவரி மற்றும் பதிவுத் துறை அமைச்சர் பி.மூர்த்தி, மாண்புமிகு தகவல் தொழில்நுட்பவியல் மற்றும் டிஜிட்டல் சேவைகள் துறை அமைச்சர் முனைவர் பழனிவேல் தியாகராஜன், நாடாளுமன்ற உறுப்பினர் சு.வெங்கடேசன், சட்டமன்ற உறுப்பினர்கள் அ.வெங்கடேசன், மு.பூமிநாதன், கோ.தளபதி, மதுரை மாவட்ட ஆட்சித்தலைவர் கே.ஜெ. பிரவீன்குமார், இ.ஆ.ப., மதுரை மாநகராட்சி ஆணையர் சித்ரா விஜயன். இ.ஆ.ப.,





# நாட்டில் இதுவே முதல்முறை: எஸ்ஐஆர் படிவத்தில் தவறான தகவல் தந்த குடும்பம் மீது வழக்கு

ராம்பூர்: டிச.8-

நாட்டிலேயே முதல் முறையாக எஸ்ஐஆர் படிவத்தில் தவறாக தகவல்களை அளித்தததாக பெண் உள்ளிட்ட 3 பேர் மீது வழக்குப்பதிவு செய்யப்பட்டு உள்ளன. இந்த சம்பவம் உ.பி.யில் நடைபெற்றுள்ளது.



நாடு முழுவதும் வாக்காளர் பட்டியல் சிறப்பு தீவிர திருத்தம் எனப்படும் எஸ்ஐஆர் பணிகள் வேகம் எடுத்துள்ளன. உண்மையான வாக்காளர் யார்? பல இடங்களில் உள்ள ஒரே வாக்காளரை அடையாளம் காணுதல், இடம்மாறிய மற்றும் உயிரிழந்த வாக்காளர்களை பற்றிய விவரங்களை அறிதல் போன்றவையே எஸ்ஐஆர் பணியின் நோக்கமாகும்.

பீஹாரை தொடர்ந்து மேற்கு வங்கம், கேரளா, தமிழகம் உள்ளிட்ட பல மாநிலங்களில் எஸ்ஐஆர் பணிகள் வேகம் எடுத்துள்ளன. தேர்தல் கமிஷனின் எஸ்ஐஆர் நடவடிக்கையை எதிர்க்கட்சிகள் கடுமையாக எதிர்த்து வரும் சூழலில் நாட்டிலேயே முதல்முறையாக எஸ்ஐஆர் விண்ணப்பத்தில் தவறான தகவல்களை அளித்ததாக உ.பி. மாநிலம் ராம்பூரில் பெண் உள்ளிட்ட 3 பேர் மீது வழக்கு பதிவாகி உள்ளது.

ராம்பூர் பகுதியைச் சேர்ந்த ஜூவாலா நகரில் வசிப்பவர் நூர்ஜஹான். இவருக்கு இரு மகன்கள் உள்ளனர். அவர்களின் பெயர்கள் முறையே ஆமிர் கான், டானிஷ் கான் ஆகும்.

இவர்கள், நீண்ட ஆண்டுகளாகவே துபாய் மற்றும் குவைத்தில் வசித்து வருகின்றனர். எஸ்ஐஆர் படிவத்தை நூர்ஜஹான் சமர்ப்பித்து உள்ளார். அதில் ஜூவாலா நகரில் அவர்கள் வசித்து வருவதாக நூர்ஜஹான் குறிப்பிட்டு உள்ளார்.

படிவத்தை சமர்ப்பித்த பின்னர், சம்பந்தப்பட்ட ஜூவாலா நகர் பகுதியில் தேர்தல் கமிஷனின் ஓட்டுச்சாவடி நிலை அலுவலர்கள் கள சரிபார்ப்பில் ஈடுபட்டனர். டிஜிட்டல் சரிபார்ப்பின் போது, நூர்ஜஹான் தந்த தகவல்கள் அனைத்தும் தவறானது என்பதை கண்டுபிடித்தனர். அதாவது, மகன்கள் ஜூவாலா நகரில் வசிப்பது போல குறிப்பிட்டு, இருவரின் கையெழுத்தையும் நூர்ஜஹானே போட்டு படிவத்தை சமர்ப்பித்துள்ளார்.

இந்த மோசடி வெளிச்சத்துக்கு வந்ததை அடுத்து தாய் நூர்ஜஹான் மற்றும் அவரின் இரு மகன்கள் மீது முதல் தகவல் அறிக்கை பதிவு செய்யப்பட்டுள்ளது. அதில் கூறப்பட்டுள்ளதாவது;

நூர்ஜஹான் சமர்ப்பித்த எஸ்ஐஆர் படிவங்களை ஓட்டுச்சாவடி நிலை அலுவலர்கள் கள சரிபார்ப்பில் ஈடுபடுத்தினர். அப்போது, ஆமிர் கான், டானிஷ் கான் இருவரும் வெளிநாடுகளில் இருப்பது கண்டறியப்பட்டது. வெளிநாடுகளில் மகன்கள் வசித்தாலும் உள்ளூரில் வசிப்பது போல் அவர்களின் தாய் கணக்கெடுப்பு படிவத்தில் தகவல்களை நிரப்பி, அவர்கள் போலவே கையெழுத்திட்டு உள்ளார்.

இது 1950ம் ஆண்டு மக்கள் பிரதிநிதித்துவ சட்டப்பிரிவு 31ஐ மீறுவதாகும். இந்த சட்டப்பிரிவின் படி ஒருவர் வாக்காளரின் நிலை குறித்து தவறான அறிவிப்பு அல்லது தவறான தகவலை வழங்குவது தண்டனைக்குரிய குற்றமாகும். மகன்கள் இருவர், தாயார் என 3 பேரும் வேண்டும் என்றே உண்மைகளை மறைத்து மோசடி செய்து இருக்கின்றனர். இது பிஎன்எஸ் 2023ன் தொடர்புடைய பிரிவுகளின் கீழ் தண்டனைக்குரிய குற்றமாகும்.

இந்த சம்பவம் குறித்து ராம்பூர் மாவட்ட கலெக்டர் அஜய்குமார் திவேதி கூறியதாவது; தலைமை தேர்தல் கமிஷன் வழிகாட்டுதல்படி, மாவட்டத்தில் உள்ள அனைத்து தொகுதிகளிலும் சிறப்பு தீவிர திருத்தப் பணிகள் வெளிப்படைத்தன்மையுடன் நடத்தப்படுகிறது. தவறான தகவல்களுடன் படிவங்களை தாக்கல் செய்வது அல்லது உண்மைகளை மறைப்பது தேர்தல் விதிகளை கடுமையாக மீறுவதாகும்.

இவ்வாறு கலெக்டர் அஜய்குமார் திவேதி கூறி உள்ளார்.

# கொடைக்கானலில் இந்து முன்னணியினர் ஆர்ப்பாட்டம்

மதுரை, டிச.8-

மதுரை மாவட்டம் திருப்பரங்குன்றம் மலைமீது அமைந்துள்ள அருள்மிகு முருகன் திருக்கோவிலில் அமைந்துள்ள தீபத்தூணில் கார்த்திகை தீபம் அன்று தீபம் ஏற்றுவதற்கு மதுரை உயர்நீதிமன்ற நீதி அரசர் ஜி ஆர் சுவாமிநாதன் உத்தரவு பிறப்பித்த நிலையில் உயர்நீதிமன்ற தீர்ப்பை மதிக்காத வகையிலும் தீபம் ஏற்ற விடாமலும் தொடர்ந்து இந்து மக்களை அவமதிக்கும் வகையிலும் நடந்து கொண்ட திராவிட முன்னேற்றக் கழகத்தை எதிர்த்து தமிழ்நாடு முழுவதும் மாநிலம் தழுவிய ஆர்ப்பாட்டத்தை இந்து முன்னணி அறிவித்த நிலையில் திண்டுக்கல் மாவட்டம் கொடைக்கானலில் இந்து முன்னணி கொடைக்கானல் நகரத் தலைவர் மோகன் ஜி மற்றும் பாரதிய ஜனதா கட்சியின் திண்டுக்கல் மேற்கு மாவட்ட துணைத் தலைவர் ஜி மதன்குமார் அவர்கள் தலைமையில் (7 /12 /2025) ஞாயிறு மாலை ஐந்து முப்பது மணி அளவில் ஆர்ப்பாட்டம் நடைபெற்றது. இதில் 70க்கும் மேற்பட்ட நிர்வாகிகள், இந்து பொதுமக்கள் மற்றும் தொண்டர்கள் கலந்து கொண்டனர் இந்த ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்ட அனைவரையும் கொடைக்கானல் காவல் ஆய்வாளர் வசந்தகுமார் மற்றும் துணை ஆய்வாளர் அபினேஷ் தலைமையில் அனைத்து இந்து முன்னணி மற்றும் பாரத ஜனதா கட்சி யினரை கைது செய்து தனியார் மண்டபத்தில் வைத்து பின்னர் விடுத்தனர்

SAKKRA VIYUGAM owned and published by PAL PANDIAN, printed at SHANLAX PRESS 66, VP COMPLEX, TPK MAIN ROAD, VASANTHA NAGAR, MADURAI-625003,
Published at 70/53 A1, THILAGAR NAGAR 1ST STREET, ANUPPARPALAYAM, TIRUPPUR, TAMIL NADU-641652 Editor: PAL PANDIAN Phone : 88705 00000